# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 வைகாசி 26 புதன்கிழமை (09-06-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 167


# செம்மணியில் பிரசன்னமாகியிருக்க சர்வதேசப் பிரதிநிதிகளுக்கு அனுமதி

## அரசு நேற்று வழங்கியது

கொழும்பு, ஜூன் 9

செம்மணியில் உள்ளதாகக் கருதப்படும் பெரும் மனித புதைகுழி எதிர்வரும் 16, 17 ஆம் திகதிகளில் நீதிவானின் கண்காணிப்பின் கீழ் தோண்டப்படும்போது அங்கு மூன்று சர்வதேச தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் நிபுணர்கள் பார்வையாளர்களாகப் பிரசன்னமாகி இருப்பதற்கு உத்தியோகபூர்வ அந்தஸ்த்தையும் அனுமதியையும் அளிக்கும் அறிவப்பை இலங்கை அரசு நேற்று மாலை விடுத்தது.

முதலாம் கட்ட தோண்டுதல் பணி 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறும். அச்சந்தர்ப்பத்தில் மீட்கப்படக் கூடிய எலும்புக் கூடுகள் மற்றும் எச்சங்கள் அநேகமாக 19 ஆம் திகதிக்குப் பின்னர் சட்ட மருத்துவ ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

அந்த நடவடிக்கைகளில் பார்வையாளராகக் கலந்து கொள்வதற்கான அனுமதி மற்றும் அந்தஸ்து சர்வதேச மன்னிப்புச் சபை, ஆசிய மன்றம் (Asia Foundation), மனித உரிமைக்கான மருத்துவர்கள் அமைப்பு ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளது — என்று அரசு அறிவித்துள்ளது.

சட்ட மருத்துவ நிபுணர்களும் விஞ்ஞான ஆய்வாளர்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## செம்மணிப் பகுதியில் நில அளவைப் பணி

யாழ்ப்பாணம், ஜூன் 9

செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு முன்னோடியாகச் செம்மணியில் கிருசாந்தியும் அவரது தாயார் மற்றும் சகோதரர் அயலவர் ஆகியோரும் புதைக்கப்பட்ட இடங்கள் நேற்று முன்தினமும் நேற்றும் நில அளவைத் திணைக்கள ஊழியர்களால் அளவீடு செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து வந்த உதவிப் பொலீஸ் அதிகாரி எஸ். ஹேரத்தும் மற்றும் புலனாய்வுப் பிரிவு பொலீஸ் அதிகாரி ஒருவரும் நில அளவைத் திணைக்களத்தின் யாழ். அலு

[10 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் அச்சுறுத்தலாம்!

## பருத்தித்துறையின் நகர பிதா இராஜினாமா!

யாழ்ப்பாணம், ஜூன் 9

தமது பாதுகாப்புக்கு உரிய உத்தரவாதம் தரப்படவில்லை என்று தெரிவித்து பருத்தித்துறை நகர சபைத் தலைவரும் புளொட் அமைப்பின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பிரமுகருமான வடிவேலு விஜயரட்ணம் தமது பதவியை இராஜினாமாச் செய்திருக்கின்றார்.

யாழ்ப்பாணம் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தமது இராஜினாமாக் கடிதத்தை அவர் அனுப்பி வைத்திருக்கிறார்.

''நான் நகரசபை தலைவராகப் பொறுப்பேற்று ஒன்றரை வருடமாகி விட்டது. பல தடவைகள் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் எனது பாதுகாப்பிற்கு அரசு எந்த வித உத்தரவாதமும் தரவில்லை யாழ். மாவட்டத்

[10 ஆம் பக்கம்பார்க்க]

## பொருள்களை ஏற்றிவர மற்றொரு கப்பல் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 9

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசியப்பொருள்களை எடுத்து வர தனிக் கப்பல் ஒன்றை யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் ஒழுங்கு செய்துள்ளார்.

''கிரியந்த'' என்ற இந்தக் கப்பலில் இரண்டாயிரத்து 600 மெற்றிக்தொன்பொருள்களை எடுத்துவர முடியும்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 52 வர்த்தகர்கள் இக்கப்பலில் பொருள் எடுத்து வர யாழ்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 4 அமைச்சர்களுக்கு அழைப்பாணை

கொழும்பு, ஜூன் 9

இரு அமைச்சர்களையும் இரு பிரதியமைச்சர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமைச்சர்கள் பேர்ட்டி பிறேம்லால் திஸநயக்கா, நந்திமித்திர எக்கநாயக்க ஆகியோரையும் பிரதி அமைச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மின் கோபுரம் தகர்ப்பு

திருகோணமலை, ஜூன் 9

திருகோணமலை, தம்பலகாமம் பொக்குராணி பிரதேசத்தில் உள்ள சக்தி வாய்ந்த இரு மின் கோபுரங்கள் நேற்று முன்தினம் காலை குண்டு வைத்துத் தகர்க்கப் பட்டுள்ளன.

இரு கோபுரங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

(உ-3)

## இ. தொ. க. பேரணிக்கு தமிழ்க்கட்சிகள் ஆதரவு

கொழும்பு, ஜூன் 9

சிங்களத் தீவிரவாத இயக்கமான வீரவிதான அமைப்புக்கு எதிராக நாளை மறுதினம் கொழும்பில் இ.தொ.கா. ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ்க்கட்சிகளும் இடதுசாரிக்கட்சிகளும் பங்குபற்றவிருக்கின்றன.

வீரவிதான அமைப்பின் செயற்பாடுகளைக் கண்டிக்கும் ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நேற்றுக் கொழும்பில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பங்குகொண்ட தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், சமசமாஜக்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## லயன் ஏயர் விமானத்தில் காணாமற்போனவர்களின் பொருள்கள் பார்வைக்கு!

மன்னார், ஜூன் 9

கடந்த வருடம் இரணைதீவுக் கடற்பரப்பில் காணாமற்போன 'லயன்ஏயர்' விமானத்தில் பயணம் செய்தவர்களை இனங்காணும்வகையில் இச்சம்பவம் தொடர்பாக மீட்கப்பட்ட தடயப் பொருள்களை மக்கள் பார்வைக்கு வைக்க மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மன்னார் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் உள்ள இந்தத் தடயப் பொருள்களை எதிர்வரும் 24 ஆம், 25 ஆம், 26 ஆம் திகதிகளில்பம்பலப்பிட்டி

[10 ஆம் பக்கம் பார்க்க]

## திணைக்கள, உள்ளூராட்சிச் சபை தலைவர்களுடன் ஆளுநர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா நேற்றுயாழ். செயலகத்தில் அரச திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேசசபைத் தலைவர்கள், உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்றுக் காலை 10-30 மணிக்கு யாழ். செயலகத்துக்கு வருகை தந்த ஆளுநர் முதலில் திணைக்களத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இச் சந்திப்பு சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்றது.

யாழ். அரசஅதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் சுகாதாரத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், கல்வித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்றவற்றின் தேவைகளும் பிரச்சினைகளும் குறித்துக் கலந்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## சடலம் ஒப்படைப்பு

பாலஷயூர் இராணுவமுகாமுக்குச் சமீபமாகக் காணப்பட்டதாகத் தெரிவித்து இளைஞன் ஒருவரின் சடலம் படையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்தப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் குண்டு வெடிப்பில் இவர் உயிரிழந்திருக்கலாம் எனக் கூறப்பட்டது.

சடலம் அடையாளம் காண்பதற்கும் மரணவிசாரணைக்குமாக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

## செயலகப் பகுதியில் பாதுகாப்புக் கெடுபிடி!

யாழ்ப்பாணம், ஜூன் 9

வடக்குக்-கிழக்கு மாகாண ஆளுநரின் வருகையையொட்டி நேற்று யாழ். செயலகத்தின் உள்ளேசெல்வதற்கு பொதுமக்களுக்கு தடை விதிக்கப்பட்டது.

தமது வழமையான தேவைகளின் பொருட்டு யாழ். செயலகத்திற்கு நேற்று வந்த பொதுமக்கள் அனைவரும் உள்ளே செல்ல முடியாது திரும்பிச் சென்றனர்.

ஆளுநரின் வருகையையொட்டி நேற்றும் யாழ். செயலகப் பகுதியில் படையினரும் பொலீஸாரும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் வியாபாரி ஞாயிறன்று சூட்டுக்கு பலி

மன்னார் காட்டுப்பள்ளி பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வியாபாரி ஒருவர் உயிரிழந்தார்; மற்றொரு வியாபாரி காயமடைந்தார்.

உயிரிழந்தவர் வீரபாகு கனகலிங்கம் என்ற வியாபாரி என அடையாளம் காணப்பட்டுள்ளது.

எஸ். சிவானந்தம் என்பவரே காயமடைந்தார்.

இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்குப் பொருள்களைக் கடத்த முயன்ற சமயமே இவர்கள் மீது தாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகப் பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவர்களிடம் இருந்து 15 ஆயிரம் தீப்பெட்டிகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

(உ-3-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரைராஜா நினைவுதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ. துரைராஜாவின் 5 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

காலை 10. 30 மணிக்கு பல்கலைக் கழக வளவில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும்.

பிற்பகல் 3 00 மணிக்கு பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெறும்.

பல்கலைக்கழக பீடாதிபதிகள் மற்றும் ஆசிரியர்கள், ஊழியர், நிர்வாக உத்தியோகத்தர் சங்கங்களின் தலைவர்களும் நினைவுரைஆற்றுவர்.

பிற்பகல் 4.30 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெறும். (உ-7)


## சிந்து
திரையரங்கு
உரும்பிராய்
எமது புதிய C Dவெளியீடு
சாய்குமார், விஜயசாந்தி ராம்கி
நடித்த
**தளபதி கோட்டை**
நேரம்: 10. 30, 3. 30
(சி/7826)


## சேவைநலன் பாராட்டு விழாவும் பிரிவுபசாரமும்



அதிபர் **திரு. த. அப்புத்துரை**

**தலைமை: திரு. அ. மனோரஞ்சிதன் ஆசிரியர்**
**இடம்: யா / மட்டுவில் வடக்கு அ. த. க. பாடசாலை**
**காலம்: 09 - 06 - 99 புதன்கிழமை பி. ப. 1·00 மணி**

கடந்த 37 ஆண்டு சேவையில் அறிவும் ஆற்றலும் மிக்க ஆசானாக 21 ஆண்டுகளும், யா / மட்டுவில் வடக்கு அ. த. க. பாடசாலையில் அதிபர் ஏறாக 16 ஆண்டுகளும் அரும் சேவை புரிந்து மணி விழா நயந்து ஓய்வதனை உவந்து இன்று பிரிவுபசாரம் பெறுகின்ற திருவாளர் தம்பு அப்புத்துரை அவர்களின் சேவைதனை என்றென்றும் நன்றியோடு நினைந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள், பா. அ. சபை.**
**யா/மட்டுவில் வடக்கு அ த. க. பாடசாலை**
**மோகனதாஸ் சனசமூக நிலையம்.**
(66490)

## கண்ணீர் அஞ்சலி

**விநாயகர் தருமநிதியாளர், தேசாபிமானி**
அமரர்
**ஆ. சி. முருகுப்பிள்ளை**
**அவர்களுக்கு கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்**

உண்மையே கடவுள் என்றாய்!
உழைப்பே தெய்வம் என்றாய்!
பொருள் நிறைந்த வார்த்தைக்கு
பொழுதெல்லாம் நாம் உழைத்தோம்;
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

**விநாயகர் தரும நிதிய தருமகர்த்தா சபை**
**உறுப்பினர்கள்.**

தெணியம்மன் வீதி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
[66477]

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
**திரு. ஐ. நடராசா**
அவர்களின் அன்புத் தந்தையார்
**ஆ. ஐயாத்துரை**

அவர்களின் மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சபையினர்.**
**யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்**
(சி/7825)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 9
மகளிர் அபிவிருத்தி நிலையம் பாடசாலை மட்டத்தில் உயர் தர மாணவர்களுக்காக நடத்திவரும் முரண்பாடுகளைத் தீர்த்தல் தொடர்பான சமூக ஒருங்கிணைப்புக் கருத்தரங்குத் தொடரில் இன்று புதன்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்குக்கு வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர். இருதயநாதன் பிரதம விருந்தினராகவும் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (7)

★ ★ ★

யாழ்.பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றம் ஒழுங்கு செய்துள்ள 'ஐரோப்பிய ஒன்றியமும் யூரோ நாணயமும்' என்ற தலைப்பிலான விசேட கருத்தரங்கு ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குப் பல்கலைக்கழகப் பொருளியற்றுறை மண்டபத்தில் நடைபெறும்.

பொருளியற்றுறைத் தலைவர் வி. பி. சிவநாதன் கருத்துரை வழங்குவார். (உ-7)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஜூன் 9
காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தின் ஜி. சீ. ஈ. உயர்தர மாணவர் மன்றம் நடத்தும் ஒன்று கூடலும் மதிய போசன விருந்தும் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை நடராசா மண்டபத்தில் கோ. சிறீவரதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதி எஸ். சிறீசற்குணராசாவும், திருமதி எஸ். சிறீசற்குணராசாவும், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளரும் முன்னாள் அதிபருமான செ. தேவதாசனும் கலந்து கொள்வர்.
(உ-6)


## நாகம்ஸ்
சுன்னாகம்.
அர்ஜுன் - ரஞ்சிதா
கவுண்டமணி - செந்தில்
நடித்த
**ஜெய்ஹிந்த்**
காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)
(66456)



## ராஜா
யாழ்ப்பாணம்
விஜய் - தேவயானி
ரம்பா - மணிவண்ணன்
செந்தில்
மற்றும் பலர் நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
10-30, 2-30
[சி/7742]



## லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
ராமராஜன், சங்கீதா,
வடிவேல்
நடித்த
**பூமனமேவா**
(புதிய வெளியீடு)
காட்சிகள், 10.30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No. 070-212223
FOREIGN T. P. No.
0094-70-212223
(66328)


# மரண அறிவித்தல்கள்

திருமதி
## சண்முகநாதன் ஜெயமணி

அக்தியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதன் ஜெயமணி கனடாவில் 07-06-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா — மனோவமணி தம்பதிகளின் அன்பு மகளும் சண்முகநாதனின் அன்பு மனைவியும் திருக்கேதீஸ்வரநாதன், ஜெயநாதன், கலைவாணி ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி ஐயாத்துரை சண்முகவடிவின் மைத்துனியும் திருமதி நாகலிங்கம் கனகாம்பிகை, ஜெயராஜா, ஜெயபாலன், ஜெயரட்ணம், ஜெயசிங்கம், ஜெயமலர் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சனிக்கிழமை 12-06-99 இல் கனடாவில் நடைபெறும்.

தகவல்:
**ந. ஜெயராஜா**

104, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(66486)

## வேலுப்பிள்ளை அன்னபூரணம்

கச்சேரியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னன் என்று அன்பாக அழைக்கப்படும் வேலுப்பிள்ளை அன்னபூரணம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லாச்சி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமசிவம் (மரக் கூட்டுத்தாபனம்), பத்மநாதன் (கல்வித் திணைக்களம்), மகேஸ்வரன் (வர்த்தகத் திணைக்களம்), பரமேஸ்வரன் (லண்டன்), ஜெகசோதிநாதன் (யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற றஞ்சநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாக்கியம், புஸ்பாஞ்செல்வி, இராஜலக்ஷ்மி, வசந்தராணி, ரேவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் மற்றும் சூரி கந்தையா, காலஞ்சென்றவர்களான சூரி பொன்னுத்துரை, ராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தாரணி, தீபன், தர்சினி, தயா, சதீஸ், துஷி, ஜசி, கிரிஜா, மது, குணா, ரஜீதன், கபீசன், சசினா, காந்தன், தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (09-06-99) புதன்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வே. பத்மநாதன்**
(மகன்)

இல. 20, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(66491)

## அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ்மரியம்மா

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் 2/2, மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜேம்ஸ் மரியம்மா 04- 06- 1999 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸின் (வைத்தியர்) அன்பு மனைவியும், அருள்பிரகாசம் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் விவசாயத்திணைக்களம்), வரப்பிரகாசம் (டேவிட் இத்தாலி), றீற்றா பிளசம், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் (மரியதாஸ்), சறோஜா பேபி (கனடா), நற்கருணை பிரகாசம் நேசராசா (பெற்றோலியக் கூட்டுதாபனம்), Dr. பிரான்சிஸ் பிரகாசம் (விமலன் கனடா), பிரகாசராசா (சேவியர் கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும், யோசப்பின் மேரிதிரேசா (ஓய்வு பெற்ற ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), றீற்றா (ஓய்வுபெற்ற ஆசிரியை திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வி.), ஆதர், நல்லபிள்ளை (கனடா), றெஜினோல்ட் (கனடா), சுகந்தா, விஜி (கனடா), ஜோய் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான சீமான்பிள்ளை, சுவாம்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, அருளானந்தம் மற்றும் லூர்துமேரியின் அன்புச் சகோதரியும் திரு. திருமதி றூபினி தாஸ்கரன் (கனடா), திரு. ஜெகநாதன், திருமதி ஜெகநாதன் (கூட்டுறவு பரிசோதகர், யாழ்ப்பாணம்), திரு திருமதி சாயினி அன்ரனி (கனடா), திரு திருமதி துஷிஜிட்டேன்ரன், திரு. திருமதி நிலானிலீயோ போல் (கனடா), சுபானி (கனடா), திரு. திருமதி சிந்தியா ரட்னாகரன் (கனடா), சித்திரா, Dr. ஜெயர்தன் (கனடா), திரு திருமதி நாதன் ஜெயந்தினி, (கனடா), சுகந்தினி, (கனடா), திரு. திருமதி சுவீற்றி சுகுமார் (கனடா), திரு. திருமதி ஜனா அரியராஜா(கனடா), திரு. திருமதி கிருஷ்சாந்தி அனந்தன் (கனடா) பமினா, டினோ, (கனடா), நிக்கி (கனடா), கிளிஷ் (கனடா) றயன் (கனடா), செறோலினா (கனடா), அமென்டா (கனடா) ஆயோரின் அன்புப் பேர்த்தியும், அர்ச்சனா, குமரன், டிலான், லோறன், சஞ்சிற் வரோனிக்கா ஆகியோரின் அன்புப் பூட்டியும், அருள்தந்தை S. J. இம்மானுவேல் அடிகளாரின் அன்பு மாமியுமாவர்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று (09- 06- 99) புதன்கிழமை மாலை 3. 30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டுபுனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**றீற்றா பிளசம் ஆதர்**
**மற்றும் பிள்ளைகள்**

2/2, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.
(66489)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருட்டுக் குற்றச் சாட்டில் ஐவர் நீதிமன்றில் ஆஜர்

13 ஆயிரத்து 150 ரூபா பெறுமதியான பொருள்களை திருடியதாக குற்றம் சாட்டப்பட்ட ஐந்து பேர் யாழ். பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஜெகந்நாதன் டோன் றெக்ஸி (வயது 19), குவேந்திரன் கௌரீதரன் (வயது 19), பிறசுரி நிமல் பிறேந்திரா (வயது 20). பர்னாந்து சசிகாந்தன் (வயது 20), புஷ்பராசா அன்ரனி (வயது 20) ஆகியோரே திருட்டுக் குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவர்கள்.

இந்த சந்தேக நபர்களில் முதலாவது சந்தேக நபரான ஜெகந்நாதன்டோன் றெக்ஸி அரசு தரப்பு சாட்சியாக மாறி தமது குற்றங்களை ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் ஐவரையும் தலா 5 ஆயிரம்ரூபா ரொக்கப்பிணையிலும், தலா 25 ஆயிரம் ரூபாஆள் பிணையிலும் விடுவிக்க மேலதிக நீதிவான்எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

மேலும் திருடப்பட்ட பொருள்களை பொலீஸார் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர் உத்தரவுபிறப்பித்தார்.

(இ-5-7)

# பாடசாலைக் கட்டடம் புனரமைப்பு

வடமராட்சி, ஜூன் 9

புலோலி வடகிழக்குஉருத்திராவத்தை அன்பு மலர்கள் பாலர் பாடசாலைக் கட்டட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

சர்வோதயத்தின் உதவியுடன் இப்பாலர் பாடசாலைக்கான கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

(ஐ-173)

# உண்டியல் உடைத்து திருட்டு

நாவற்குழி, ஜூன் 9

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் திருப்பணி உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் அண்மையில் 10 நாள்கள் திருவிழா நடைபெற்றது. அப்பொழுது உண்டியலில் போடப்பட்ட பணமே திருடப்பட்டுள்ளது.

(இ-102)

# கார்ட் மூலம் இயங்கும் தொலைபேசி

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்திற்கு சமீபமாக கார்ட் மூலமாக இயங்கும் தொலைபேசி சேவை ஒன்று ரெலிகொம் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஐ-100)

# தபால்கள் இன்று வரும்

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 162 தபாற் பொதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலமாக இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் என யாழ். பிரதம தபால அதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இதே வேளை—

குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 45 தபாற் பொதிகள் மேற்படி கப்பல் மூலம் இன்று திருமலைக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-7)

# நியமனம்

வடமராட்சி, ஜூன் 9

வடமராட்சி, கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளராக பருத்தித்துறைஹாட்லிக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய பி. வேணு கோபால் பதவி உயர்வுடன் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹாட்லிக் கல்லூரியின் பதில் அதிபராக க. குணசீலன் பொறுப்பேற்றுள்ளார்.

(ஐ-173)

## தருமபுரம் ஆஸ்பத்திரியில்

# கடந்த 5 மாதங்களில் 35,310 பேர் சிகிச்சை

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் உள்ள தருமபுரம் அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த ஐந்து மாதங்களில் 35 ஆயிரத்து 310 பேர் பல்வேறு நோய்களுக்காக சிகிச்சை பெற்றுச்சென்றுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெளிநோயாளர் பிரிவில் 34 ஆயிரத்து 854 பேரும், உள்நோயாளர் பிரிவில் ஆயிரத்து 146 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சிகிச்சை பெற்றவர்களில் அதிகமானோர் காய்ச்சல் மற்றும் வாந்திபேதி ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# குடாநாட்டில் மீண்டும் முந்திரிகைச்செய்கை

யாழ்ப்பாணம், ஜூன் 9

யுத்தச்சூழ்நிலைகளால் கைவிடப்பட்டிருந்த முந்திரிகைச்செய்கை தற்போது யாழ். மாவட்டத்தில் மீள் நடுகை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் 7 ஹெக்டேயரில் மேற்கொள்ளப்பட்ட முந்திரிகைச் செய்கை இந்த வருடம் 10 ஹெக்டேயரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1986 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 280 ஹெக்டேயரில் பழப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

1987 ஆம் ஆண்டு ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக இப்பயிர்ச்செய்கையின் ஒரு பகுதி அழிவுக்குள்ளானது.

பின்னர் நாட்டில் தொடர்ந்து இடம்பெற்ற குழப்ப நிலையினால் போக்குவரத்து தடைப்பட்டது. இதனால் இந்த முந்திரிகைப்பழத்தினை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதுடன் பயிர்ச்செய்கையும் கைவிடப்பட்டது.

1994 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 22 ஹெக்டேயர் நிலப்பரப்பில் மீண்டும் இந்த செய்கை மேற்கொள்ளப்பட்டது.

1995 ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக இந்த செய்கை பாதிக்கப்பட்டு மீண்டும் தற்பொழுது மீள் நடுகை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(இ-5-ரி)

# சுகாதார கல்விச் சேவை

கோப்பாய். ஜூன் 9

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'சுகாதார கல்விச் சேவை, இன்று புதன்கிழமை கைதடி குமாரபுர நகரில் நடைபெறவுள்ளது.

பாடசாலை, சனசமூக நிலையம், வீடு என்பவற்றில் மக்களுக்கான சுகாதாரக் கல்வி அறிவுரைகளும், மருத்துவப் பரிசோதனை சிகிச்சை என்பனவும் மேற்கொள்ளப்படவுள்ளன.

(ஐ-72)

# ஆளுநரிடம் அறிக்கை சமர்ப்பிக்க முடிவு

வடமராட்சி, ஜூன் 9

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் தேவைகள், ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆளணி பற்றாக்குறை போன்றவை தொடர்பாக யாழ்ப்பாணம் வந்துள்ள வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜெயவர்த்தனாவிடம் விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக விவரங்களைத் உடனடியாகத் தருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா கேட்டுள்ளார்.

[இ-173]


உ

சக்தி துணை



நயினாதீவு.

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## பிரமாதி வருஷம் - 1999

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் பிரமாதி வருஷம் வைகாசி மாதம் 31 ஆம் நாள் [14-06-1999] திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் அம்பாளின் மஹோற்சவம் ஆரம்பமாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14-06-99 | — | திங்கள் | — | பகல் | 12.00 மணி கொடியேற்றம். |
| 20-06-99 | — | ஞாயிறு | — | இரவு | கைலைக்காட்சி. |
| 22-06-99 | — | செவ்வாய் | — | பகல் | எழுந்தருளி அம்பாளுக்கு அஷ்டோத்திர [108] சங்காபிஷேகம் |
| 23-06-99 | — | புதன் | — | இரவு | சிவபூஜை கைலைக்காட்சி. |
| 24-06-99 | — | வியாழன் | — | பகல் | வாயுபட்சணி நாகம் வீதியுலா. |
| 26-06-99 | — | சனி | — | பகல் | கைலைக்காட்சி, இரவு — சப்பறம் |
| 27-06-99 | — | ஞாயிறு | — | பகல் | 10.00 மணி — தேர் |
| 28-06-99 | — | திங்கள் | — | காலை | 6.00 மணி — தீர்த்தம். |
| | | | — | இரவு | திருவூஞ்சல், கொடியிறக்கம் |
| 29-06-99 | — | செவ்வாய் | — | இரவு | தெப்பத் திருவிழா. |

அம்பாளைத் தரிசிக்க அடியார்களை வருக வருகவென வேண்டிக் கொள்வதுடன், இயன்ற மட்டும் பொதிகளைக் குறைத்துக் கொண்டால் பிரயாணம் இலகுவாகும் எனவும், அம்பாளின் பெயரால் எவரிடமும் எப் பொருளையும் வழங்கவேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரயாண, குடிநீர், உணவு, சுகாதார வசதிகள் வழமைபோல் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 25—06—1999 வெள்ளிக்கிழமை
காலை 8 மணிக்கும் 10 மணிக்கும் இடையிலான சுபவேளையில்
அராலியூர் சிற்பக்கலாபமணி திரு. சின்னத்தம்பி அமரசிங்கமும்
சகோதரர் சின்னத்தம்பி கணேசலிங்கமும், உறவினர்களும்
இணைந்து உருவாக்கிய
ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்குரிய சிற்பத் திருத்தேர்

## வெள்ளோட்ட விழாவும்

சிறப்பாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது என்பதையும்
அறியத்தருகின்றோம்,

அம்பிகையின் திருவருள் அனைவருக்கும் கிடைப்பதாகுக!

## அறங்காவலர்சபையினர்,

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

நயினாதீவு,
09—06—99

(66468)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...று விளம்பரம்

...பகரணங்கள், ...ள பாடங்கள், ...ா, பீங்கான் ...ாகள் விற்பனைக்கு ...ண்டு. தொடர்பு: 11/1, நாயன்மார் வீதி, நல்லூர், முத்திரைச் சந்திக்கு அருகில். (66433)

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட 240 ரக்ரர் மில்லுக்குரிய புதிய கிறைண்டர்கள், நெல்உடைக்கும்சைனிஸ்கெட் பொலிசர்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு. சிவம், மானிப்பாய் (இலங்கை வங்கி முன்பாக). [66442]

### இறைச்சிக்கோழி

புரொயிலர், கல்பேடஸ், சேவல் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குஉண்டு. தொடர்பு: இல. 31, மான் பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம், பொன்னாலை வீதி. விதானை வளவு, மானிப்பாய். (66286)

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் (பாதிக்கோழி உட்பட) தினமும்சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். மிக நுட்பமான நிறுவை அத்துடன் அடை முட்டையும் வாழைக்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: (நல்லூர்வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (66454)

## R. G.
## ஸ்ரேரஸ்

எம்மிடம்
ஆட் பிறஷ்,
போஸ்காட் பேப்பர்
12X10 வந்துள்ளது.
56A, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.
[66470]

## பெண் பாடகிகள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபலமான இசைக் குழுவொன்றுக்கு நல்ல குரல் வளமுள்ள பெண்பாடகிகள் தேவை.
தொடர்புகளுக்கு:
இலக்கம். 325,
கே. கே. எஸ் வீதி,
(முடடாசுக்கடைச் சந்தி அருகில்)
யாழ்ப்பாணம்.
(66473)

### தேவை

கோழிப் பண்ணையில் வேலை செய்வதற்கு ஒருவர் தேவை. குடும்பமாகத் தங்கி இருக்கவும் வசதிகள் உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (66403)

### திருத்துதல்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குச்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, இல. 301, கஸ்தூரியார் வீதி, மேல் மாடி, (கன்னாதிட்டிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். [66347]

## 2 ஆவது பிறந்ததின விழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம்
வைகாசி மாதம் 26 ஆம் நாள் [9 - 6 - 99)
புதன்கிழமை மாலை 3 மணி அளவில்
எமது இல்லத்தில் நடைபெறும்

எமது மகன்
## கௌரிசங்கர்

அவர்களின் 2ஆவது பிறந்தநாள் வைபவத்தில் தங்கள் குடும்ப சகிதமாக வருகைதந்து எமது புதல்வனை வாழ்த்திச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்
பே. செந்தில் கலா தம்பதிகள்

37/1, வைமன் றோட் நல்லூர்,
யாழ்ப்பாணம். (66460)

வயாவிளான்
## மத்திய மகாவித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம்
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: 12 - 06 - 99 சனிக்கிழமை
காலை 10 மணி

இடம்: பாடசாலை மண்டபம்

உறுப்பினர்களும் புதிய உறுப்பினராகச் சேர விரும்புபவர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

செ. செல்வரத்தினம்,
செயலாளர்.

வயாவிளான் ம. ம. வி.,
உரும்பிராய். [66471]

## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
வெளிக்கள உத்தியோகத்தர் சங்கம்
யாழ். கிளை

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 - 6 - 99 திங்கள் நடைபெறும். (கூட்டம் நடைபெறும் இடம் பின்பு பிரசுரிக்கப்படும்) இதுவரை அங்கத்தவராகச் சேராதவர்கள் தங்கள்அமைப்பாளருடன் அல்லது சங்க செயலாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கவும்.

ச. சண்முகராஜா,
செயலாளர்.

167/1, கோயில் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
T. P. 2784 (66475)

## காஞ்சியில் கல்வி பயில அந்தணர்கள் பயணம்

இந்தியாவின் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தில் பயிற்சி பெறுவதற்காக இந்தியா செல்லவுள்ள 16 அந்தண இளைஞர்களும் நேற்று இங்கிருந்து கொழும்பு பயணமானார்கள்.

இவர்கள் இந்தியா செல்லும் முன்னர் தமக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களிடமும் இந்தியாவில் கல்வி கற்பதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்த இந்துமத குருமார் ஒன்றிய பிரமுகர்கள், கௌரவ வித்துவ சபையினர், பெற்றோர் ஆகியோரிடமும் ஆகி பெறும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்றது

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் கோபாலகிருஷ்ணன் இந்தியா செல்லும் அந்தண இளைஞர்கள் அங்கு சிறப்புறக் கற்று மீண்டும் எமது நாட்டுக்கு வந்து ஆன்மீகத் தொண்டு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் பேசும் போது தெரிவித்ததாவது;

ஒரு காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து பல சிறந்த அறிஞர்கள் இங்கே வந்து குருத்துவப் பயிற்சி அளித்துள்ளார்கள் அதே போன்று இங்கிருந்து இந்தியா சென்ற பல சிவாச்சாரியர்கள் அங்கு பெரும் புகழ் ஈட்டியுள்ளனர். காஞ்சி காமகோடி பீடத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு — என்று தெரிவித்தார்.

இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் மகேஸ்வரக் குருக்கள் பேசும் போது கூறியதாவது:

எங்களது குருகுலம் குருத்துவம் அழிந்து போகாமல் இருக்க வேண்டும். இன்று எம்மைச்சேர்ந்த பலர் வெளிநாடு செல்கிறார்கள். அல்லது வேறு தொழில்களை நாடிச் செல்கின்றார்கள். எனவே எமது குருகுலத்தை காக்க வேண்டியதேவைஎமக்குண்டு. ஆகவேதான் நாம் பல சிரமங்களுக்கு மத்தியிலும் உங்களை இந்தியா சென்று குருத்துவக் கல்வி கற்பதற்கான ஒழுங்குகளைச் செய்ய முன்வந்தோம். — என்றார். (ஐ - 6)

## பாலர் ஆசிரியராக பயிற்சி

தகைமை:
க. பொ. த.
சாதாரணதரம்,
அல்லது மேல்
தபாலில் ஆறுமாதங்களில் பயிலலாம்.

பாலர் ஆசிரியர் சங்கம்
கொக்குவில்,
(66481)

## மரண அறிவித்தல்கள்

### பெஞ்சமின் குமாரகுலசிங்கம்

நாவாந்துறையைச் சேர்ந்த பெஞ்சமின் குமாரகுலசிங்கம் 08—06—99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் வரோணிக்கா, ஞானமணி ஆகியோரின் கணவரும், காலஞ்சென்ற யேக்கப் பெஞ்சமின், அடைக்கலம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற அ. புவனேஸ்வரி, ம பிரான்சீஸ்கம்மா, பெ. யேக்கப் ஆகியோரின் சகோதரரும் பிறேமா, எதிர் வீரசிங்கம் [சவூதி], சூரியகுமாரி, அன்ரன் பகவத்சிங், பிறிஜ்செற்குயின், அன்ரன் சுதாகர்சிங் [சவூதி], அன்ரன் பெஞ்சமின் [சவூதி], அன்ரன் ஜெறாட் [யாழ். ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் தந்தையும், பிலிப், அன்ரனிதாஸ், மேரி மாகிறேற், கெலன் வயலெற், அமலஜோதி. சுகிர்தநாயகி ஆகியோரின் மாமனாரும், றெக்சலா, டெர்வின், றெமின்ரா, ஆர்ச்ஜன், ஆனோஷன், சூரியப் பிரியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 229, கடற்கரை வீதி, நாவாந்துறையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று (09—06—99) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நாவாந்துறை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெஞ்சமின் யேக்கப் [சகோதரன்]

இல. 229,
கடற்கரை வீதி,
நாவாந்துறை. [66465]

### திருமதி தங்கம்மா தாமோதரம்பிள்ளை

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கம்மா தாமோதரம்பிள்ளை 8-6-99 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற திரு திருமதி கந்தையா அவர்களின் அன்பு மகளும், காலஞ் சென்ற திரு. திருமதி ஆறுமுகம் அவர்களின் அன்பு மருமகளும், தாமோதரம்பிள்ளை (சந்தைக் கடை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற பேரம்பலம் (கொத்தணி அதிபர்), கமலாவதி, பரமலிங்கம், இலட்சுமணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரதிதேவி (ஆசிரியை), கேதீஸ்வரன்(ஆசிரியர்), சந்திரேஸ்வரன் (கனடா), குலதேவி (கனடா), சறோஜாதேவி (ஆசிரியை), ஜெகதீஸ்வரன்(B. Sc. Hons.), குகனேஸ்வரன் (கொழும்பு), உலகேஸ்வரன் (சந்தைக்கடை) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜீவரட்ணம்(கிராம சேவையாளர்), நளாயினி (ஆசிரியை), மாலா, தர்மசீலன் (கனடா), சோதிராசா (ஆசிரியர்), கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க இலட்சுமணன்
[சகோதரன்]

நெடுந்தீவு மேற்கு,
நெடுந்தீவு (66462)

உ
விராட் விஸ்வபிரம்மனே நம
## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் பிரமாதி வருடம் வைகாசி மாதம் 28 ஆம் நாள் (11—06—99)
வெள்ளிக்கிழமை 11.53 மணி முதல் 1.00 மணிவரையுமுள்ள
சித்தயோகம் கூடிய சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரி
## செல்வி அனித்திரா
அவர்களுக்கு

பூப்புனித நீராட்டுவிழா நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்
திரு. திருமதி அருள்ராசன் குடும்பம்
678/2. கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

அல்லி
ரூபி நகை மாளிகை,
111/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (66474)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வலி.வடக்கில் மக்கள்

# மீளக்குடியமர்ந்த பகுதிகளில் திருட்டுக்கள் அதிகரிப்பு

வலிகாமம் தெற்கு, ஜூன் 9

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பன்னாலைக் கிராமத்தில் தினமும் திருட்டுக்கள் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது:

மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பின்னர் அப்பகுதியில் குடியேறியுள்ள மக்கள் கிராம அபிவிருத்தி பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் தீவிரமாக கவனம் செலுத்தி வருகின்ற அதேவேளையில் திருட்டுக்களும்நாளாந்தம் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆள்கள் இல்லாத வீடுகளில் மட்டுமல்லாது மக்கள் குடியிருக்கும் வீடுகளில் கூட திருட்டுக்கள் இடம் பெற்று வருகின்றன:

வீட்டின் ஓடுகள், மரங்கள், கொங்கிறீட்கற்கள், வீட்டுத் தளபாடங்கள் மட்டுமல்ல மலசல கூடங்களில் உள்ள கதவுகள் கூட திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகி வருகின்றன:

பன்னாலைக் கிராமத்தில் உள்ள பங்கிலிசிட்டி என்ற காணியில் செய்கை பண்ணப்பட்டிருந்த வெற்றிலைக் கொழுந்துகள் சென்றவாரம் திருடர்களால் பகல் நேரத்தில் வெட்டிச் செல்லப்பட்டுள்ளன;

சுமார் ஆயிரம் கன்றுகள் செய்கை பண்ணப்பட்ட இவ் வெற்றிலைத் தோட்டத்திலிருந்து சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான வெற்றிலைகள் திருடப்பட்டதாக அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்;

திருடப்படும் பொருள்கள் ஏனைய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருடர்களால் குறைந்த விலைக்கு விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-152)

## பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஜூன் 9

அமரர் ஹண்டி பேரின்பநாயகம் நூற்றாண்டு விழாவை ஒட்டி கொக்குவில் இந்துக்கல்லூரியால் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

★ பிரிவு I

முதலாம் இடம் செல்வி வை. மீரா, 2 ஆம் இடம் செல்வி ச. சாளினி.

★ பிரிவு II

முதலாம் இடம் செல்வி தி. காயத்திரி, 2 ஆம் இடம் செல்வி வை. அபர்ணா, 3ஆம் இடம்செல்வி நா: ஸ்ரீதர்சினி;

★ பிரிவு III

முதலாம் இடம் செல்வி தி; ஜனுஜா, 2 ஆம் இடம்செல்வி அ. பத்மினி 3 ஆம் இடம் செல்வி தி. சுகன்யா;

★ பிரிவு IV

முதலாம் இடம் செல்வி கு. தர்சிகா, 2 ஆம் இடம் செல்வி நா: சுகந்தி, 3 ஆம் இடம் செல்வன் சோ: சிறிகிருஷ்ணன்.

(இ-க)

### டாக்டர் எவரும் இன்றி

## அனலைதீவு ஆஸ்பத்திரி மூடப்பட்ட நிலையில்

நெடுந்தீவு, ஜூன் 9

அனலைதீவு கிராமிய வைத்தியசாலை வைத்திய அதிகாரி எவரும் இல்லாத நிலையில் பல மாதங்களாக மூடிக்கிடக்கிறது.

இந்த வைத்தியசாலையில் பாம்புக்கடி தவிர்ந்த ஏனைய நோய்களுக்குத் தேவையான மருந்துகள் போதிய அளவு உண்டென்றும் மற்றும் வசதிகள் இருப்பதாகவும் ஆனால் வைத்திய அதிகாரி இன்மையால் ஆஸ்பத்திரி செயற்பட முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவு வைத்தியசாலைக்கு ஆறு மாதங்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் வைத்திய அதிகாரியை அனுப்பி வைப்பது போன்று இங்கும் குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருவர் என்ற ரீதியிலாவது சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் வைத்திய அதிகாரி ஒருவரை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப்பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-111)

## வீதிகள் புனரமைப்பு

வடமராட்சி, ஜூன் 9

பருத்தித்துறை வல்லிபுரப் பரிகாரியார் அரசடிவீதி, விநாயக முதலியார் வீதி ஆகியன பருத்தித்துறை நகர சபையினால் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் திருத்திப் புனரமைக்கப்பட்டுள்ளன. நகர எல்லைக்குள் மேலும் 9 வீதிகள் விரைவில் திருத்திப் புனரமைக்கப்படவுள்ளன.

(ஐ-173)

## 240 இலங்கையர்களுக்கு அமெரிக்க வீஸா

யாழ்ப்பாணம், ஜூன் 9

அமெரிக்க அரசு வருடந்தோறும் லொத்தர் மூலம் வழங்கி வரும் நிரந்தர வதிவிட வீஸா நடைமுறையில் இந்த வருடம் 240 இலங்கையர் இதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளனர்என்று தெரியவருகிறது:

இந்த வீஸாவுக்காக விண்ணப்பித்து தெரிவானவர்களுக்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்டமையை உறுதிப்படுத்தும் கடிதங்கள் அமெரிக்க வெளிநாட்டு அமைச்சினால் சம்பந்தப்பட்ட இலங்கையர்களுக்குத் தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும்—

தெரிவானோரின் பெயர் விவரங்களை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பார்வையிட முடியும் என்றும்— தகவல்கள் தெரிவிக்கின்றன.

(இ-4)

## கைதான மாணவன் விடுவிப்பு

நெல்லியடி, ஜூன் 9

கடந்த புதன்கிழமை மாலுசந்தி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மாணவன் நான்கு நாள்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

கரணவாய் பொன்னம்பல மகா வித்தியாலயத்தில் ஜி சீ. ஈ. சாதாரண தர வகுப்பில் படிக்கும்கிருஷ்ணபிள்ளை மதிமுகன் (வயது 17 )என்பவரே பருத்தித்துறை இராணுவ முகாமில் வைத்து ஞாயிற்றுக்கிழமைவிடுவிக்கப்பட்டார்.

(ஐ-10 9)

## ஹண்டி கப்பலில் பொருள்கள்

அரியாலை, ஜூன் 9

கொழும்பு துறைமுகத்தில் வைத்து 'ஹண்டி' கப்பலில் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சமாசமும் ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களை இந்தக் கப்பலில் எடுத்துவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சமாசத் தலைவர் தெரிவித்தார்.

பொருள்கள் ஏற்றி முடிந்ததும் மேற்படி கப்பல் இம்மாத நடுப்பகுதியில் பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்

02 — 01 — 1964

மறைவு

31 — 05 — 1997

அமரர்

**சிவகுரு யோகராசா**

(மின் ஊழியர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை)

திதி: 09-06-1999

நீங்கா நினைவுடன்

கு. குணரூபன்

புகையிரத நிலைய வீதி,
பளை;

(66408)


### சண்டிலிப்பாய் பிரிவில்

## பசுமாடுகளுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்தல் வசதி

சண்டிலிப்பாய், ஜூன் 9

சண்டிலிப்பாயில் செயற்பட்டுவரும் சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் செயற்கை முறையில் பசுமாடுகளுக்கு சினைப்படுத்துதல் தினசரி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது:

இங்கு செயற்கை முறையில் சினைப்படுத்தப்பட்ட பசுக்களுக்கு இரண்டு மாத காலம் சென்றபின்பு இலவசமாக கர்ப்பப் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

— வீடுகளுக்கும் நேரில் சென்றும் பசுக்களுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது:

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் மாதத்தில் 2 ஆவது, 4 ஆவது சனிக்கிழமைகளிலும் கோழிகளுக்கு இந்த அலுவலகத்தில் நோய்தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

தனிப்பட்ட கோழிப் பண்ணையாளர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் நேரடியாக சென்று அங்கு நோய் தடுப்பு மருந்துகள் கொடுக்கப்பட்டு வருவதாகவும் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ச. கலையரசன் தெரிவித்தார்.

(ஐ-135)

## ஆசிரியர்களுக்கு மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கு

வடமராட்சி, ஜூன் 9

வடமராட்சி கல்விவலய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நான்கு கட்டங்களாக நடத்தப்பட்டு வரும் இந்த கருத்தரங்குகள் மூன்றாம், நான்காம் கட்டங்களாக எதிர்வரும் சனி. ஞாயிறு தினங்களில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

முதலாம், இரண்டாம் கட்ட கருத்தரங்குகள் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்றன;

இந்தக் கருத்தரங்குகளில் பங்கு பற்றும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு தலா 200 ரூபா வீதம் ஊக்குவிப்புப் படி யுனிசெவ் நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

(இ-173)

### கொழும்பிலிருந்து

## யாழ்ப்பாணத்துக்கு வெற்றிலைத் துண்டம் அனுப்பி வைப்பதில் தடங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 9

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வெற்றிலைத் துண்டங்களை அனுப்பிவைப்பதற்கு மாகாண அமைச்சின் விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் மறுப்புத் தெரிவித்துள்ளது;

யாழ். மாவட்டத்தில் நடுகை செய்வதற்கென 10 ஆயிரம் வெற்றிலைத் துண்டங்களை அனுப்பி வைக்குமாறு திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் மேற்படி அலுவலகத்திடம் கோரப்பட்டிருந்ததற்கு எழுதப்பட்ட பதில் கடிதத்திலேயே மாகாண அமைச்சு அதிகாரிகள் இந்த மறுப்பைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் இரு தடவைகள் கொழும்பிலிருந்து 15 ஆயிரம் வெற்றிலைத் துண்டங்கள்மாகாண அமைச்சினால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன;

இந்த வெற்றிலைத் துண்டங்களில் ஆயிரத்து 740 வெற்றிலைத் துண்டங்கள் பழுதடைந்து விட்டமையால் 13 ஆயிரத்து 260 வெற்றிலைத் துண்டங்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு அவை செய்கை பண்ணப்பட்டுள்ளன;

யாழ். மாவட்டத்தின் வெற்றிலைத் தேவையை நிறைவு செய்வதற்கு மேலும் 20 ஆயிரம் கொழும்பு வெற்றிலைத் துண்டங்கள் நடுகை செய்யப்படவேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ-5-ரி)


யா / உரும்பிராய்

## சைவத்தமிழ் வித்தியாலய பரிசளிப்பும் ஆரம்ப பிரிவு கட்டடத் திறப்பு விழாவும்

தலைமை: சு. யோகராசா (முதல்வர்)

இடம்: வித்தியாலய பொன்னுத்துரை அரங்கு

காலம்: 1999 - 06 - 10 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணி (இ. நே.)

பிரதம விருந்தினர்:
கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை
(கல்விப்பணிப்பாளர் யாழ். வலயம்)

சிறப்பு விருந்தினர்:
லயன் இ: நடராசா
(பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்)

கௌரவ விருந்தினர்:
திரு. இ. சிவஞானசுந்தரம்
(உதவிக் கல்விப்பணிப்பாளர், கோப்பாய்க் கோட்டம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்:

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர்கள்.

சைவத்தமிழ் வித்தியாலயம்,
உரும்பிராய்;

(சி/7817)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி தவளக்கிரி

# முத்துமாரி அம்மன் கோயில் மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1999

மேற்படி ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 11-6-99 வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். அடியார்கள் வருகை தந்து அம்பாள் அருள் பெற்று ஏகும் வண்ணம் வேண்டுகின்றோம்.

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 11 - 06 - 99 | வெள்ளிக்கிழமை |
| தேர் | 20 - 06 - 99 | ஞாயிற்றுக்கிழமை |
| தீர்த்தம் | 21 - 06 - 99 | திங்கட்கிழமை |

(சி/7821) ஆலய பரிபாலன சபை.


## சிரமதானம்

கொழும்புத்துறை, ஜூன் 9

தொல்புரம் கொட்டடியம்பதி ஆதி முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் கிராம ஊர்வலத் திருவிழாவை முன்னிட்டு தொல்புரம் அ. மி. த. க பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சிரமதானம் மூலம் வீதிகளைத் துப்பரவு செய்தனர்.

(க-30)

## கல்வி அபிவிருத்திக் கழகக் கூட்டம்

வடமராட்சி, ஜூன் 9

வடமராட்சி கல்வி அபிவிருத்திக் கழகத்தின் கூட்டம் இம் மாதம் 13 ஆம் திகதி புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கழகத்தின் தலைவர் எஸ். விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ-173)

## நியமனம்

வடமராட்சி, ஜூன் 9

வடமராட்சிகல்வி வலயத்தில் உள்ள மூன்று கோட்டங்களுக்கும் பொறுப்பாக கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை கோட்டத்துக்கு எம். ஸ்ரீ பதியும் கரவெட்டி கோட்டத்துக்கு எஸ். புஷ்பலிங்கமும், மருதங்கேணிக் கோட்டத்துக்கு என். நந்தகுமாரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று கோட்டங்களிலும் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகங்கள் விரைவில் திறக்கப்படவுள்ளன.

(இ-173)

## பசுக்கள் திருட்டு

வலி. கிழக்கு, ஜூன் 9

அச்சுவேலிப் பகுதியில் ஒரே இரவில் மூன்று நல்லினப் பசுக்கள் களவாடப்பட்டுள்ளன.

அச்சுவேலி தெற்குப் பகுதியிலே கடந்த 2 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பசுக்கள் ஒவ்வொன்றும் 10 ஆயிரத்துக்கு மேல் பெறுமதியுடையன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் களவாடப்பட்ட பசு ஒன்று கயிற்றை அறுத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

(க-180)

# அனலைதீவில் 390 பேருக்கு இலவச மருத்துவ சிகிச்சை

நெடுந்தீவு, ஜூன் 9

தீவுப்பகுதி லயன்ஸ் கழகம் அனலைதீவில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் 390 பேர் மருத்துவ சிகிச்சை பெற்றனர்.

மாணவர்களுக்கும் ஏனைய பொது மக்களுக்கும் இரு பிரிவாக மருத்துவ பரிசோதனைகள் இடம்பெற்றன. 80 நோயாளர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

வைத்திய கலாநிதி வை. தியாகராசா தலைமையில் யாழ். போதனா வைத்தியசாலையைசேர்ந்த வைத்திய அதிகாரிகள் பரிசோதனைகளை மேற்கொண்டனர். நோயாளர்களுக்கு மருந்து வகைகளும் வழங்கப்பட்டன.

மருத்துவ சிகிச்சை நடத்துவதற்கு வேண்டிய உதவிகளை ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர் எஸ். ஐயம்பெருமாள் செய்தார்.

தீவக லயன்ஸ் கழகத் தலைவர் கோ. விக்னேஸ்வரன், பேராசிரியர் கா. குகபாலன் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

(ஐ-111)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 — 04 — 1935 | 31 — 05 — 1997 |

அமரர்

## தில்லையம்பலம் சண்முகநாதன்

[ஓய்வுபெற்ற ஆசிரியர் — நயினாதீவு]

திதி: 09 — 06 — 1999

ஈசுரவாண்டு எழிலார்ந்த தசமிதனில்
பூசுரரின் பொற்பாதஞ் சென்றடைந்த — பேசுபுகழ்
அண்ணலே அன்புடனே அறிவூட்டும் தந்தையே
கண்முன்னே காண வருவீரோ கனிந்து.

தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்.

11/7, சந்தன மாதா கோயில் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[66463]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்லத்துரை குணபாலசிங்கம்

(இ. போ. ச. நேரக் காப்பாளர் — பருத்தித்துறை)

தோற்றம்: 18-07-1942 மறைவு: 21-05-1998

திதி: 09-06-1999

அன்புக்கினிய எங்கள் அப்பாவே!
அன்பாகப் பாசமாக எம்முடன் வாழ்ந்தீரே!
பாதிதனிலே எம்மை யெல்லாம் விட்டுப் பிரிந்தீரே!
ஆண்டு ஒன்று என்ன எத்தனை ஆண்டுகள்தான்
சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.

பத்தமேனி,
அச்சுவேலி.

[66434]

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## நா. தருமலிங்கம்

[பிரதேச செயலகம், பருத்தித்துறை.]

திதி: 10—06—99

ஆண்டொன்று சென்றதோ
எம்மைப் பிரிந்து?
உறையாத நினைவுகளை
எம் மனதில் விதைத்து
நிறைவோடு நீவிர்
விண்ணகத்தைச் சென்றடைந்தீர்!
உங்கள் நினைவாக நாள்தோறும்
அல்லலுறும் எங்களுக்கு
என்றென்றும் உங்கள் ஆசி
கிடைப்பதற்கு அருள்புரிவீர்

தங்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி,
மகன்.

சகோதரர்கள் — அருணாசலம், அபிராமிப்பிள்ளை, தங்கநாயகி, தர்மரத்தினம்.

மைத்துனர் — விசாகப்பெருமாள், இராசேந்திரம்.

மாமியார் — சிவக்கொழுந்து.

செட்டித்தெரு,
பருத்தித்துறை.

(66268)

உ

# சிவாசார்ய அபிஷேக அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ ஸர்வமங்கள பிரமாதி வருடம் வைகாசி மாதம் 27 ஆம் நாள் (10-06-1999) வியாழக்கிழமை அஸ்வினி நட்சத்திரமும் ஏகாதசி திதியும் அமிர்த யோகமும் கூடிய சுபநன்னாளில் முற்பகல் 8 மணி 24 நிமிடம் முதல் 8 மணி 52 நிமிடம் வரையான குருஹோரையுடன் கூடிய கடகலக்கின சுபநன்முகூர்த்தத்தில்

## யோகீஸ்வரக் குருக்கள் ரஞ்சிதசர்மா

(வேம்படி முருகமூர்த்தி கோயில் பிரதமகுரு)

அவர்களுக்கு

வேம்படி முருகமூர்த்தி கோயில் ஆலய மண்டபத்தில் விசேஷதீட்சா, நிர்வாண தீட்சா, ஆசாரியாபிஷேகம் செய்ய திருவருளும் குருவருளும் கூடியுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திட்சாகுரு: சிவாச்சார்யமணி நா. யோகீஸ்வரக் குருக்கள்

வித்தியாகுரு: சிவாகம ஞானபானு சிவஸ்ரீ நா, மகாதேவக் குருக்கள் (காயத்திரி பீடம் இணுவில்)

முகூர்த்த நிர்ணயம்: பிரம்மஸ்ரீ தி. பரமேஸ்வரன் ஐயர் (உடுவில்)

சுபம்!

தங்கள் நல்வரவை நாடும்!

ரஞ்சிதசர்மா ரமாராணி தம்பதிகள்.

வேம்படி முருகமூர்த்தி கோயில்,
கொக்குவில்.

(66391)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இனியேனும் உணருவரா?

இராணுவத்துக்குப் புதிதாக ஆளசேர்ப்பதற்கான முயற்சி தென்னிலங்கைப் பிரதேசங்களில் எதிர்பார்த்த— போதிய— பலன் தரவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிதாகப் பத்தாயிரம் பேரைச் சேர்க்கவேண்டும் என்பது இராணுவ அதிகாரிகளின் இலக்காக இருந்தது ஆனால் அந்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதியினரைத் தானும் திரட்டமுடியவில்லையாம்!

போரில் வெற்றி காண வேண்டும் என்பதில் ஆட்சித் தலைவர்களை திருப்திப்படுத்த இராணுவ உயர் அதிகாரிகள் முனைவது இயல்பு. அதன் பொருட்டு படையின் ஆள்பலத்தை அதிகரிக்க அவர்கள் புதியவர்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கிறார்கள்.

கொழுத்த சம்பளம் மற்றும் பல வசதிகளைக் கண்டு சிங்களக் கிராமங்களைச் சேர்ந்த, வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் முன்னர் படையில் இணைந்தனர்.

ஆனால் இப்போது நிலைமை வேறு. போர் முனையில் மரணமடைந்து சிதைந்த சடலங்கள் அடிக்கடியும் அதிக எண்ணிக்கையிலும் சிங்களக் கிராமங்களுக்குச் செல்கின்றன. மற்றும் பல சிங்கள இளைஞர்கள் போர் முனையில் அங்கவீனர்களாகி எதிர்காலம் இருள் சூழ்ந்த நிலையில் உள்ளனர்.

இத்தகைய காரணங்களாலேயே தென்னிலங்கை இளைஞர்கள் இப்போது இராணுவத்தில் சேர்வதற்கும் பின் நிற்கிறார்கள்.

இராணுவத்தில் சேருவதற்குத் தென்னிலங்கை இளைஞர்களுக்கு உணர்ச்சியூட்டும் வகையிலும் கவர்ச்சியான முறையிலும் அரசு தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் போன்ற ஊடகங்கள் மூலம் விளம்பரங்கள் செய்திருந்தபோதிலும் அவர்கள் ஈர்க்கப்படவில்லை.

இலங்கை இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பதில் அரசு கஷ்டமுறுவது இது தான் முதல் தடவை என்பதல்ல. இதற்கு முன்னரும் ஆகக் குறைந்தது இரண்டு, மூன்று தடவைகள் ஆள் திரட்டும் முயற்சி போதிய பயன் அளிக்கவில்லை.

இந்தத் தோல்வி எதனைக் காட்டுகிறது? வடக்கு – கிழக்கில் அரசாங்கம் போர் நடத்துவது அர்த்தமற்றது என்பதனை தென்னிலங்கையின் கிராம இளைஞர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். நகரங்களில் உள்ள உயர் வகுப்பினர் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்குக் கல்வி பயிலவும் தொழிலுக்கும் விட்டு தங்களது அரசியல் அதிகாரத்துக்காக ஏழைகளாகிய தங்களையே பலிக்கடாக்களாக்குகின்றனர் என அவர்கள் புரிந்து கொண்டுவிட்டனர்.

இதிலிருந்தாவது அரசும் அதன் போர் விரும்பும் அதிகாரிகளும் யுத்தத்தை நீட்டிச் செல்வதால் அடையப்போவது எதுவும் இல்லைஎன்பதனைஉணர வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு உணர்வர் என்று எதிர்பார்க்க முடியாது. காரணம் போரினால் நன்மைகள் பல பெறுபவர்கள் அவர்களே!

# ஊடுருவலைத்தடுப்பதுபற்றிமட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தப்படும்

## பிரதமர் வாஜ்பாய் திட்டவட்டமாக அறிவிப்பு

புதுடில்லி, ஜூன் 9

கார்கில் பகுதியில் ஊடுருவல்காரர்களின் ஊடுருவலைத் தடுக்குமாறும், அது குறித்து மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தப்படும் எனவும் இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

பேச்சு நடத்துவதை வாய்ப்பாகப் பயன்படுத்திய எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை மாற்றுவதற்கு ஊடுருவல் பயன்படுத்தப்பட்டால் உத்தேச பேச்சுக்கள் தொடங்குவதற்கு முன்னரே தோல்வியில் முடிவடைந்து விடும் எனவும் பிரதமர் எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தான் ஊடுருவல்காரர்கள் இந்தியாவின் கார்கில் எல்லைக்குள் ஊடுருவியிருப்பது குறித்தும் அவர்களை விரட்டுவதற்கு இது வரை தம்மால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் இந்திய மக்களுக்கு நேற்று முன்தினம் இரவு தொலைக் காட்சி மூலம் பிரதமர் உரையாற்றினார்.

எல்லைகட்டுப்பாட்டுக் கோட்டை தமக்குச் சார்பாக மாற்றிவிட பாகிஸ்தான் தனது படைப் பலத்தை அதிகரித்துள்ளது

எல்லைக்கட்டுப்பாட்டுக் கோடு தெளிவற்றதாக உள்ளது என பாகிஸ்தான் கூறுவது தமது ஊடுருவல்காரர்களின் ஆக்கிரமிப்பை உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

பாகிஸ்தானும் இந்தியாவும் பிரதேச ஒருமைப்பாடு சுய ஆட்சியுரிமை மற்றும் சுதந்திரத்தை பரஸ்பரம் மதித்து நடக்க வேண்டும் என "சிம்லா" உடன்படிக்கை வலியுறுத்துகின்றது.

பாகிஸ்தானிய ஊடுருவல்காரர்கள் இந்தி எல்லைக்குள் ஊடுருவியதன் மூலம் பாகிஸ்தான் 'சிம்லா" உடன்படிக்கையை மீறிவிட்டது.

1971 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் போர் நிறுத்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வரையறுக்கப்பட்ட எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை இந்தியாவும் பாகிஸ்தானும் மதிக்கவேண்டும் எனவும்—

எந்தச் சந்தர்ப்பத்திலும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை இந்த இரு நாடுகளில் ஒன்றேனும் தமக்குரிய கட்டுப்பாட்டுப பகுதியாக மாற்றக் கூடாது எனவும்—

ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது

கடந்த 27 ஆண்டுகளில் இந்தப் பகுதி குறித்து ஒரு முறை கூட எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை.

தற்போது பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள முயற்சி மூலம் அது இந்தியாவை ஏமாற்ற நினைக்கக்கூடாது எனவும் பிரதமர் வாஜ்பாய் தமது உரையில் தெரிவித்தார்.

(ஐ - 7)

## எச். ஐ. வி. பரப்பியதாக டாக்டர்கள் மீது வழக்கு

தெஹ்ரான், ஜூன் 9

ஈரானில் மருத்துவ தேவைகளுக்காக இரத்தம் ஏற்றும் சமூக அமைப்பைச் சேர்ந்த மூன்று டாக்டர்கள் கொலைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நீதிமன்றவிசாரணையை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ தேவைகளுக்கு இரத்தம் வழங்கும் சமூகப் பணியை மேற்கொண்டுவரும் ஓர் அமைப்பின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு முதல் இதுவரை இந்த அமைப்பைச் சேர்ந்த மூன்று டாக்டர்கள் ஏற்றிய இரத்தம் மூலம் சிறு குழந்தைகள் உட்பட 80 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும்—

இந்தக் கொலைகளுக்கு இந்தடாக்டர்களே பொறுப்பு என்றும்— தெரிவித்தது நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எச். ஐ. வி. கிருமிகளை இரத்தத்துடன் சேர்த்து இந்த டாக்டர்கள் ஏற்றியதாலேயே இந்த மரணங்கள் சம்பவித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஐ-3)

## அறுதிப் பெரும்பான்மையுடன் கோவாவில் காங்கிரஸ் வெற்றி

கோவாமாநில சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்துள்ளதை அடுத்து காங்கிரஸ் ஆட்சி அமைக்கவுள்ளது.

தேர்தல்கள் நடந்த 39 தொகுதிகளிலும் முடிவுகள் வெளியிடப்பட்ட நிலையில்

உலக அரங்கில்

காங்கிரஸ் கட்சி 21 இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

பாரதிய ஜனதா 10 இடங்களிலும், மாகாராஷ்டவாதி சோமந்தக்கட்சி 4 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன,

கோவா ராஜீவ் காங்கிரஸ், ஐக்கிய கோவா ஜனநாயகக் கட்சி ஆகியன தலா 2 இடங்களைப் பிடித்துள்ளன.

ஏற்கனவே ஒருதொகுதியில் காங்கிரஸ் கட்சி போட்டி இன்றி வெற்றி பெற்றிருப்பதன் மூலம் 40 உறுப்பினர்களைக் கொண்ட கோவா சட்ட சபையில் காங்கிரஸ் 22 இடங்களைப் பெற்று அறுப பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கின்றது.

## 84 பயணிகள் மூழ்கினர்

கர்நாடக மாநிலத்தின் தவணகிரி மாவட்டத்தில் உள்ள பால்கரே அணைக்கட்டில் பயணிகளுடன் சென்ற பஸ் வண்டி ஒன்று திடீரென கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த சுமார் 84 பேர் மூழ்கி விட்டதாக மாவட்டப் பொலீஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

மேற்படி பஸ்ஸில் பயணம் செய்த 25 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். (ஐ 7)

## பாரதீய ஜனதா ஏற்பாட்டில் 'காஷ்மீர் தினம்' அனுஷ்டிப்பு

புதுடில்லி, ஜூன் 9

பாரதீய ஜனதாக்கட்சி எதிர்வரும் 23 ஆம் திகதியை 'காஷ்மீர் தினமாக' அனுஷ்டிப்பதென முடிவு செய்துள்ளதாக அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் பிரச்சினையை விளக்குவதற்கும் ஜம்மு காஷ்மீர் பகுதியில் இயல்பு நிலையை ஏற்படுத்த பாரதீய ஜனதாக் கூட்டணி அரசு எடுத்து வரும் முயற்சிகள் பற்றி பலருக்கும் எடுத்துரைக்கவும் —

ஊடுருவல்காரர்களை வெளியேற்ற தொடர்ந்து போராடிவரும் இந்தியாவின் இராணுவம் மற்றும் விமானப படை வீரர்களுக்கு ஆதரவுதிரட்டவுமே இந்த 'காஷ்மீர்தினம்' அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-7)

## குற்றச்சாட்டு

இந்தியாவையும் பாகிஸ்தானையும் யுத்தம் ஒன்றுக்குள் தள்ளும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டு வருவதாக ஈராக் குற்றஞ்சாட்டியுள்ளது.

(இ)

## சீனா கவலை

பெய்ஜிங் ஜூன் 9

காஷ்மீர் எல்லைக் கோட்டுப் பகுதியில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நெருக்கடி நிலை தோன்றி இருப்பது குறித்து சீனா கவலை தெரிவித்துள்ளது.

இரு நாடுகளும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சீனா கோரிக்கை விடுத்துள்ளது.

## ஞானோதயா வித்தியாலய கட்டடத்துக்கு ரூ.11 லட்சம்

அளவெட்டி, ஜூன் 9

கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது முற்றாக சேதமடைந்த அளவெட்டி வடக்கு சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயத்தை மீளக் கட்டும்பணிக்காக, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் பதினொரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

பாடசாலை வளவினுள் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள், மிதிவெடிகள் என்பன பாதுகாப்புபடையினரால் அகற்றப்பட்டு, புல்டோசர் மூலம் நிலமும் துப்புரவு செய்யப்பட்டுள்ளன

இம்மாத இறுதிக்குள் கட்டட அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன (இ-13)

### நாளை

வைகாசி 27

வியாழக்கிழமை

திதி: ஏகாதசி

பிற்பகல் 11 10 வரை

நட்சத்திரம்: அச்சுவினி

முன் இரவு 9.54 வரை

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 7.22-8 52

ராகுகாலம் 1.52-2.22

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

துயரத்திலிருந்து சக்தியைச் சேகரிப்பவனை நான் அன்புடன் பாராட்டுகின்றேன்.

— நாமஸ்பெய்ன்

## தேங்காய் விலை பெருமளவு சரிவு

அளவெட்டி, ஜூன் 9

வலிகாமம் பகுதிச் சந்தைகளில் தேங்காயின் விலை பெருமளவு குறைந்துள்ளது. இதேவேளை தேங்காய் எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது.

கடந்த பல மாதங்களாக அறுபது ரூபாவுக்கும் அதிகமான விலையிலே விற்பனை செய்யப்பட்ட ஒரு பெரிய தேங்காய் தற்போது 20 ரூபா முதல் 25 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது.

யாழ் குடாநாட்டுப் பகுதிகளில் தேங்காய் உற்பத்தி அதிகரித்ததும் கப்பல் மூலம்தேங்காய் தருவிக்கப்பட்டதுமே தேங்காயின் விலை சரிவுக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது

(இ 13)

## நெடுந்தீவு மீனவர்களுக்கு கடனடிப்படையில் வலை

நெடுந்தீவு, ஜூன் 9

நெடுந்தீவு கடற்றொழிலாளர்களுக்கு சுழற்சிக்கடன் அடிப்படையில் மீன்பிடி வலைகளை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் வழங்கினார்

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இதற்கென ரூபா ஐந்துலட்சம் நிதி உதவி அளித்தது முதற் கட்டமாக ஐம்பது மீனவர்களுக்கு வலைகள் வழங்கப்பட்டுள்ளது

வலைகள் வழங்கும் நிகழ்ச்சியில் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் அ. வெ. அரியநாயகம் மாவட்ட கடற்றொழில் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் (இ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் நாதஸ்வர கலைஞர்கள் கௌரவிப்பு விழா சிறப்பு மலர்

[09-06-99]

## நல்லை குரு முதல்வர் ஆசி

அன்புசார் பெருந்தகையீர் !

நாதஸ்வர வித்துவான் ஜெகநாதன் சிவதாசன், நாதஸ்வர வித்துவான் சுப்புசாமி பாலமுருகன் ஆகிய இருவரையும் பாராட்டிச் சிறப்புச் செய்வதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். தெய்வீகக் கலையாகிய நாதஸ்வரக் கலையைப் பரம்பரையாகச் செய்து வரும் இருவரும் மரபு வழியில் இக் கலைக்கு தங்களை அர்ப்பணித்திருப்பது எல்லோருடைய பாராட்டுக்குமுரியதாகும். எமது சமயத்தின் போற்றுதற்கும் தெய்வீக சக்தியைத் தருவதுமாகிய நாதஸ்வரக் கலை இந்நாட்டில் பரம்பரை பரம்பரையாக வருகின்றது. அன்பர் சிவதாசனின் பேரனாம் மாசிலாமணியும் அன்பர் பாலமுருகனின் தந்தையார் சுப்புசாமியும் இந் நாட்டில் இக்கலையை நீண்ட நாள்களாக இறைவனுக்கும் மக்களுக்கும் அர்ப்பணித்ததால் அவர்களுடைய மக்களும் தந்தை வழியில் இக் கலைக்குத் தங்களை அர்ப்பணித்துள்ளனர். இரு இளங் கலைஞர்களும் இந்தக் கலையில் சிறப்புடன் முன்னேறிச் சீரும் சிறப்பும் பெற்றுவாழ வாழ்த்துகின்றோம். வளர்ந்துவரும் கலைஞர்களை வாழ்த்திப் பாராட்டி விழா எடுக்கும் திரு. கானமூர்த்தி அவர்களையும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.**

திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.

## குருவின் ஆசி

இன்று புதன்கிழமை நடைபெறுகின்ற கௌரவிப்பு விழா சிறப்பாக நடைபெறவும் என்னுடன் நாதஸ்வரம் வாசிக்கும் இளம் கலைஞர்களாகிய பாலமுருகன், சிவதாசன் ஆகிய இருவரும் இசைத்துறையில் மேன் மேலும் வளர வேண்டும் என்றும் இவர்களால் இன்னும் பல கலைஞர்கள் உருவாகுவதற்கு வழிகாட்டியாய்த் திகழவேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

நாதஸ்வரவித்துவான்

**வி. கே. கானமூர்த்தி.**

கோண்டாவில்.

## பல்லாண்டு வாழியவே!

நிகழும் மங்களகரமான வைகாசி மாதம் இன்று புதன்கிழமையன்று நிகழவிருக்கின்ற கௌரவ வைபவத்தில் திருவாளர் சுப்புசாமி பாலமுருகன், ஜெகநாதன் சிவதாஸன் ஆகிய இருவரும் பல்லாண்டு பல்லாண்டுகாலம் நீடூழி வாழியவே என்று ஆசி கூறுவதோடு சங்கீத இசைத்துறையில் மேன் மேலும் வளர்ந்து இவர்கள் இருவரும் இன்னும் எத்தனையோ சங்கீத வித்துவான்களை உருவாக்க வேண்டும் என்று எம் பெருமான் சந்திரசேகரப் பிள்ளையாரை வேண்டுகின்றோம் இருவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்றுபல்லாண்டு பல்லாண்டு வாழியவே!

— சுபம் அஸ்து —

**சிவஸ்ரீ ச. சிறீஸ்கந்தராஜக்குருக்கள்.**

**சிறப்பு மலரை வெளியிட உதவிய வர்த்தகர்களுக்கு எமது நன்றிகள்.**

### விழா ஏற்பாடு:

நாதஸ்வர கலைஞர்

வி. கே. கானமூர்த்தியும்

கோண்டாவில் மக்களும்



இளங்கலைஞர்கள் சிவதாஸனும் பாலமுருகனும்.

## இளங் கலைஞர்கள் ஏற்றம் பெறுக!

கலையுலகிலே கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்களைத் தெரியாதவர்எவருமில்லை. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புகழ்பெற்ற நாதஸ்வரக் கலைஞர்களாகிய அவர்களுடைய வழிநடத்தலிலே வந்து, தற்போது அவர்களுடன் கூட்டாக இயங்கும் திரு. ஜெகநாதன் சிவதாசனும், சுப்புசாமி பாலமுருகனும் பாராட்டப்படவுள்ளனர். இவ்விருவரும் நாதஸ்வரக் கலையிலே நல்ல பயிற்சியினை பெற்றுள்ளனர். பஞ்ச மூர்த்தியிடம் நாதஸ்வரத்தை நன்கு பயின்றவர் திரு. ஜெ. சிவதாசன். பின்னர் தமிழ் நாட்டில் பழனியிலுள்ள நாதஸ்வரக் கல்லூரியிலே பயிற்சி பெற்றார். குருபரம்பரைப் பயிற்சியுடன் கல்லூரிப் பயிற்சி இக்கலையினை நன்கு கையாள உதவும் என்பதிலே ஐய

(9 ஆம் பக்கம் பார்க்க)

## வளரும் கலைஞரை வாழ்த்துவோம்

காட்டினின்றும் வருகுவதோ? — நிலாக்
காற்றைக் கொண்டு தருகுவதோ? — வெளி
நாட்டினின்றுமித் தென்றல் கொணர்வதோ
நாதமிஃதென் உயிரையுருக்குதே.

— பாரதியார்

காற்றைக் கானாமிர் தமாக்கும் அரியகலை நாதஸ்வரக் கலை. தென்னாட்டிலும் ஈழத்திருநாட்டிலும் சுபகாரியங்கள் யாவற்றையும் மங்கலமாக்கும் இம் மகத்தான கலையை பல நூறுவருடங்களாகப் பேணிப் பாதுகாத்து வருபவர்கள்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## இசைச் சேவை செய்தே வாழி!

நாதஸ்வர கானலய ஞான மிக்கார்
நவினமிகு ராகபாவம் ததும்ப இசைக்
கீதமெலாம் மனமுருக்க நாத வெள்ளம்
கிளர்கின்ற பக்தியொடு இசைக்கும் செல்வர்
வேதமதாம் சாமகீதம் பயின்று இசை
விதிமுறையாய்ப் பயிற்சி தரும் குருவும் வாழ்த்த
பூதலத்தில் இளங்கலைஞர் சிவதாசனும்
பாலமுருகனும்நீடு வாழி! வாழி!

குருபக்தி கொண்ட இளம் கலைஞரான
குணசீலர் சிவதாசன் பாலமுருகன்
தருகீதம் ராகபாவம் பிரவாகிக்கும்
தாளலய ஞானமும் மிளிர்ந்திருக்கும்
பெருஞானம் தனைவளர்த்துப் பக்தியோடு
பெறற்கரிய இசைச் சேவை செய்தே வாழி!
குருநல்கும் ஆசிபெற்றே இசையின் மேன்மை
குவலயத்தில் பெற்றேஇளங்கலைஞர்வாழி!

''சுபம்''

'மஹாவித்துவான்'

**பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்.**

## துர்க்கா துரந்தரி ஆசி

எங்கள் மண்ணில் மங்கல வாத்தியமாகப் போற்றப்படுவதும் பேணப்படுவதுமான இசைக் கருவிகள் தவிலும் நாதஸ்வரமும் ஆகும். ஆலயங்களிலும் மங்கல நிகழ்வுகள் நடைபெறும் இடங்களிலும் இவற்றின் பெருமையையும் அருமையையும் உணர முடிகிறது. இத்துறை சார்ந்த கலைஞர்களைத் தெய்வீகக் கலைஞர்கள் என்று பாராட்டுவதும் எமது பண்பாடாகும்.

யாழ். மண்ணில் நாதஸ்வர இசையை மேலும் மேலும் மெருகூட்டி வருபவர்களை நாம் மறக்கமுடியாது. அளவெட்டி, இணுவில், மாவிட்டபுரம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம். ஆகிய இடங்களில் சிறப்பாக இக் கலைஞர்கள் இடம் பெற்றுள்ளனர் என்பது கண் கூடு. இந்த வகையில் செல்வன் ஜெகநாதன் சிவதாசன் அவர்களும், செல்வன் சுப்புசாமி பாலமுருகன் அவர்களும் சமீபத்தில் பரராட்டுப்பெற இருப்பது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும். தெய்வகானமாகிய நாதஸ்வர இசையை நல்லபடி பயின்று நடைமுறைப்படுத்தி மேன்மையுற வேண்டுமென்று இளங்கலைஞர்கள் இருவரையும் வாழ்த்தி ஆசி கூறி அமைகின்றேன். வணக்கம்

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

தலைவர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை.

## நிகழ்ச்சிகள்

- **இடம்: ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம், கோண்டாவில் மேற்கு.**
- **காலம்: இன்று புதன் பிற்பகல் 3 மணி.**
- **தலைவர்: க. தேவராஜா**
  தலைவர்
  வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்
- மங்கள விளக்கேற்றல்
- தேவாரம்: சங்கீதபூஷணம் ரி. சிவஞானசேகரம்
- மங்கள இசை
  பாராட்டுக்குரிய கலைஞர்கள்:
  ஜே. சிவதாஸன், எஸ். பாலமுருகன் — நாதஸ்வரம்
  வி. கணேசன், ஆர். பாஸ்கரன் — தவில்
- ஆசியுரை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
- பிரதம விருந்தினர் உரை:
  பேராசிரியர் அ. சண்முகதாஸ்
  கலைப்பீடாதிபதி,
  யாழ். பல்கலைக்கழகம்.
- சிறப்பு விருந்தினர்கள்:
  ஆறு. திருமுருகன்
  ந. வீரமணி ஐயர்
  எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா
  (கிராம அலுவலர் கோண்டாவில் மேற்கு
- கலைஞர்களுக்கு தங்கப் பதக்கம் அணிவிப்பவர்கள்:
  பேராசிரியர் அ. சண்முகதாஸ்
  நாதஸ்வர கலைஞர் கே. ஆர். சுந்தரமூர்த்தி
- கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்போர்:
  ந. வீரமணி ஐயர்
  ஆறு. திருமுருகன்
  ஆலய சபையினர்
- ஆசியுரை:
  ஸ்ரீஸ்கந்தராஜ குருக்கள்
  ஆலய பிரதம குரு
- நன்றியுரை:
  இ. தயாபரன்

— **நாதஸ்வர கலைஞர் வி. கே. கானமூர்த்தி அவர்களும் கோண்டாவில் மக்களும்.**

மகாராணி பட்டுச்சோலை
பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

ஐயாத்துரை யோகராசா
ராஜா களஞ்சியம் அன் ராஜா மில்
கே. கே. எஸ். றோட்,
உப்புமடம் சந்தி,
கோண்டாவில்.

சண்முகன் வர்த்தக நிலையம்
கே. கே. எஸ். வீதி,
குளப்பிட்டி சந்தி.
தொலைபேசி
உள்நாடு 070 - 212236
வெ. நா. 0094-70-212236

செ. தில்லையம்பலம்
விநாயகர் பொறியியல் பேட்டை
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

சி. கே. பி,
தொலை தொடர்பு சேவை
021 - 2907
ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
021 - 2637
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

பெஷன் ஹவுஸ்
65, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பரணி குறூப்
கே. கே. எஸ். வீதி
தாவடி.

கணேசன் ரேடிங் கோ
கே. கே. எஸ். வீதி
இணுவில்.

ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்
பலாலி றோட்,
திருநெல்வேலி.

ஆறுமுகம் சிற்பாலயம்
காளி கோயிலடி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாநகர எல்லைக்குள்

# அங்கீகரிக்கப்பட்ட கடைகளில் இறைச்சி வாங்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 9

மாநகரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட இறைச்சிக் கடைகளில் விற்கப்படும் இறைச்சியை மட்டுமே வாங்குமாறு யாழ். மாநகர சபை சுகாதாரப் பிரிவு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக யாழ். மாநகர சபை சுகாதாரப் பிரிவினர் விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மைக் காலங்களில் களவாடப்பட்ட கால்நடைகள் மற்றும் பன்றிகளின் இறைச்சிகள் சட்ட விரோதமாக விற்பனை செய்யப்பட்டதை எமது அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். அவ்வாறு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இவ்வாறான சட்டவிரோத விற்பனை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. அண்மையில் இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட — பழுதடைந்த— இறைச்சியை உண்ட பலர் சுகவீனமுற்றுள்ளனர்.

இவ்வாறான சட்டவிரோத செயல்களைத் தடுப்பதற்கு மக்களுடைய பூரண ஒத்துழைப்பு எமக்கு வேண்டும். மாநகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இறைச்சிக் கடைகளில் மட்டுமே இறைச்சியை வாங்கியும்—

மாநகர சபையால் அங்கீகரிக்கப்படாத கடைகளில் விற்கப்படும் இறைச்சியை வாங்காமல் விட்டும்—

பொதுமக்கள் எம்முடன் ஒத்துழைத்தால் எம்மால் இந்த சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும்.

அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட கடைகளில் இறைச்சியை வாங்கும்போது அதன் தரத்தை உறுதிப்படுத்தும் 'சீல்' இறைச்சியில் வைக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்து வாங்கவும்—

இவ்வாறு அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-6)

## லயன்ஸ் இலவச சிகிச்சையின் போது 23 பேருக்கு பற்கள் அகற்றப்பட்டன

தென்மராட்சி, ஜூன் 9

பளை லயன்ஸ் கழகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி கிழக்கு தாளையடி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடத்திய இலவச சிகிச்சை முகாமில் பற்களில் பாதிப்பு ஏற்பட்டிருந்த 23 பேருக்கு பற்கள் அகற்றப்பட்டன.

மேலும் சிகிச்சை முகாமில் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்யப்பட்ட 173 பேரில் கண்ணில் பாதிப்பு ஏற்பட்டுள்ளோரில் வறுமைக் கோட்டின்கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 20 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இரத்த அமுக்கம், நீரிழிவு ஆகிய பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.

படையினரின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள பகுதிகளைச் சேர்ந்த பலர் சிகிச்சை முகாமில் கலந்து கொள்ள வந்தபோதிலும் பாதுகாப்பு அரண் ஊடாக உள்ளே வர அனுமதிக்கப்படாததால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

கழகத் தலைவர் லயன் முனேஸ் துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக லயன்ஸ் கழக பிராந்தியம் 8இன் பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தமும், சிறப்புவிருந்தினராக சாவகச்சேரி லயன்ஸ் கழக செயலாளர் லயன் அ. பொ. செல்லையாவும் கலந்து கொண்டதாக கழகச் செயலாளர் லயன் கு. ந. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

(இ-117)

## சேவைநலன் பாராட்டு விழா

சாவகச்சேரி, ஜூன் 9

மட்டுவில் வடக்கு அ. த. க. பாடசாலையில் 16 வருடங்கள் அதிபராகப் பணிபுரிந்து ஓய்வுபெறும் த. அப்புத்துரையின் சேவைநலன் பாராட்டு விழாவும் பிரிவுபசார விழாவும் இன்று பிற்பகல் ஒரு மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை ஆசிரியர் அ. மனோரஞ்சிதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசாவும் சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் இ. கணேசன், நா. சத்தியநாதன், இ. கைலைநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக டாக்டர் பே. பிலிப்ஸும் கலந்து கொள்வர்.

(உ-31)

## திறப்புவிழா

அரியாலை, ஜூன் 9

உரும்பிராய், ஊரெழு பகுதிகளை உள்ளடக்கிய விவசாய உற்பத்தி நுகர்ச்சிச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் திறப்புவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

சங்கத் தலைவர் இ. நடராசா தலைமையில் நடைபெறும் இந்த விழாவிற்கு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், வடக்கு- கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் க. சண்முகலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாகக் கோப்பாய்ப் பிரதேசசெயலர் க. கேதீஸ்வரன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி கோ. திருநாவுக்கரசு ஆகியோரும்,

விசேட விருந்தினர்களாக மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி ஆகியோரும் கலந்து கொள்வர்.

(உ-17)

## விசாரணைக்கு ஏற்பு

கொழும்பு, ஜூன் 9

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்கு—கிழக்கு இணைப்பாளரும் வவுனியாக் கிளைச் செயலாளருமான சிவநாதன் கிஷோரின் அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வது என உயர் நீதிமன்றம் நேற்று முடிவு செய்தது.

தான் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக [illegible] தெரிவித்துள்ளார்.

(உ-6)

## இளம் நாதஸ்வர கலைஞர்கள் கௌரவிப்பு விழா சிறப்பு மலர்

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### இளங்கலைஞர்கள்...

மில்லை. சுப்புசாமி பாலமுருகன் நாதஸ்வரக் கலாநிதி என். கே. பத்மநாதனிடம் எட்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றவர். எங்கள் நாட்டின் நாதஸ்வர இசை மேதையாகிய என்.கே பத்மநாதனிடம் பெற்றபயிற்சிபாலமுருகனின் கலை வளர்ச்சிக்கு நன்கு உதவும்.

இவ்விரு கலைஞர்களும் நாதஸ்வரக் கலையினை எங்கள் நாட்டிலே பரப்புவதற்கு உழைப்பதுடன், இந்நாட்டிலே மிகச் சிறந்த நாதஸ்வரக் கலைஞர்களாக உருவாக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். தங்களுக்குப் பின்னாலே ஓர் இளந் தலைமுறை உருவாக வேண்டுமென்பதை உணர்ந்து எங்கள் நாட்டு முதுபெரும் நாதஸ்வரக் கலைஞர்கள் ஒரு மாணவ பரம்பரையினை உருவாக்கி வருகின்றனர், அவ்வாறு உருவாக்கப்பட்ட இளங்கலைஞர்களுள் சிவதாசனும் பாலமுருகனும் அடங்குகின்றனர், அவர்கள் கலை மேலும் சிறக்க என் அன்பான வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
கலைப்பீடாதிபதி
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

### வளரும்...

எம் நாட்டு இசை வேளாள மரபில் வந்த பெரும் கலைக் குடும்பத்தவர்கள் கலை மரபைப் பேணும் கலைக்குடும்பத்தில் உதித்த வளரும் கலைஞர்கள் செல்வன் ஜெகநாதன் சிவதாசன், செல்வன் சுப்புசாமி பாலமுருகன் ஆகிய நாதஸ்வரக் கலைஞர்களை வாழ்த்தி ஆசீர்வதிப்பதற்காக கலைச் சமூகம் விழா எடுப்பது அறிந்து அகமகிழ்கின்றேன் முத்தமிழ் கலைமகனாய் விளங்கிய மகா வித்துவான் மா. சிலாமணி அவர்களின் பேரனும் நாதஸ்வர மேதை திரு. பஞ்சமூர்த்தியின் மாணவனுமாகிய செல்வன் சிவதாசன் அவர்களும் நாதஸ்வரக் கலைஞர் சுப்புசாமியின் மைந்தனும் நாதஸ்வர மேதை என். கே. பத்மநாதன் அவர்களின் மாணவனுமாகிய பாலமுருகன் அவர்களும் எதிர்காலத்தில் ஈழத்துக்கலை மரபில் புகழ் பூத்த வித்துவான்களாகத் திகழ வேண்டுமென சொல்விற்பனமும் அவதானமும் கவி சொல்ல வல்ல நல்வித்தை யாவும் தரும் கலைவாணியைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

செஞ்சொற் செல்வர்
**ஆறு. திருமுருகன்.**

## நல்லூர், உடுவில் பகுதியில் மூன்று இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம் ஜூன் 9

நல்லூர், உடுவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மல்வம் உடுவிலைச் சேர்ந்த துரைசாமி ரதீஸ் (வயது 18) என்பவர் கடந்த 2 ஆம் திகதியும் —

நல்லூர் மூத்த விநாயகர் வீதியைச்சேர்ந்த குலதுங்கய் ரமேஸ் (வயது 26), கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த மாடசாமி விஜயபாலன் (வயது 22) ஆகியோர் நேற்றும்—

கைது செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் கைது செய்யப்பட்டதை உறுதி செய்யும் ரசீதுகள் படையினரால் அவர்களது உறவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(உ-5-6-173)

## ஆஸ்துமா நோயாளருக்கு 'மீன் மருந்து'

''ஆஸ்துமா'' நோயினால் பெரிதும் துன்பப்படும் நோயாளிகளுக்குத் தேவையான ''மீன் மருந்து'' எனப்படும் ஒருவகை மருந்தை ஹைதராபாத்தில் உள்ள வைத்தியக் குடும்பம் ஒன்று கடந்த 145 ஆண்டுகளாக வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்த சுமார் ஆயிரத்து 500 பேர் மேற்படி ''மீன்மருந்து'' என்னும் மருந்தைப் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நமசிவாயம் அன்னலட்சுமி

(வேலணை மேற்கு, 6 ஆம் வட்டாரம்)

வேலணை வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் தற்காலிகமாகக் கொழும்பில் வசித்தவருமான திருமதி அன்னலட்சுமி நமசிவாயம் கொழும்பில் காலமானார்.

அன்னார் நமசிவாயத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, கண்மணியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், மாரிமுத்துவின் மருமகளும், அமரர் சபாரத்தினம், சின்னராஜா (மன்னார்), அமரர் சொக்கலிங்கம், சேனாதிராஜா (வேலணை), அமரர் முத்துலிங்கம், அமரர் தில்லையம்பலம், தருமலிங்கம் (மல்லாவி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நீலாம்பிகை (மன்னார்), கலைச்செல்வி (கொழும்பு), ராஜகோபால் (சுழிபுரம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தில்லைநாதன் (கீசன் வெல்டிங்), குணரட்ணம் (பிரான்ஸ்), மலர் (சுழிபுரம்), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வநாயகம் (தங்கராசா) அவர்களின் சிறிய தாயாரும், ஜெயரூபன் (லண்டன்), ஜெயரஜித்தா (ஜேர்மனி), உதயரூபன், சத்தியரூபன் (துணுக்காய், வலயக் கல்வி பணிமனை), [illegible], வாகீசன், பிருந்தினி, செந்தூரன், வைகுந்தன், வைதேகி, குலக்ஷி, சாயிலக்ஷன், மயூரதன், மயூரிக்கா, மயூரதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விஷ்ணுகாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07 — 06 — 1999 திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு மாதம்பிட்டி மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

ந. ராஜகோபால்
சுழிபுரம்

கு. கலைச்செல்வி
192/1B, மோதற வீதி,
கொழும்பு - 15.
T P. - 528246

(66487)

## பிரான்சிஸ் யேசுதாசன்

(துரைரட்ணம்)

குருநகரை பிறப்பிடமாகக் கொண்ட பிரான்சிஸ் யேசுதாசன் 7-6-99 இல் கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் மற்றும் மெக்டலின் தம்பதிகளின் அன்பு மகனும் யோசேப் (கனடா), அன்ரன் ஜோர்ஜ் (கனடா), ஜோதிமலர் (குருநகர்), பொன்மணி (கொழும்பு), தங்கம் (கனடா), றஞ்சி (குருநகர்), ஆகியோரின் அன்புச் சகோதரரும், மேரியான் (கனடா), ஜெயந்தினி (சின்னா-கனடா), தங்கராஜா (கொழும்பு), திலகரட்ணம் (லெபனான்), அழகுராஜா (சிறி-கனடா), சிறிஸ்துராஜா (டோகா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், றொசானி (கனடா), சுபா (கனடா), நிலா (கனடா), ஜெகன் (கனடா), அன்றியா (கனடா), விஜி (லண்டன்), கௌரி (இந்தியா), ஜெயா (கொழும்பு), சமிந்தன் (கொழும்பு), கருணா (குருநகர்), சுமதி (கொழும்பு), பிரதீப் (கனடா), பிரசாந் (கனடா), பிரியந்தன் (கனடா), பிறியஸ் (கனடா), பிரியா (குருநகர்), பிரகாஷ் (குருநகர்), பிரியந்தி (குருநகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10-6-99) வியாழக்கிழமை கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும். அன்று பிற்பகல் 4 மணிக்கு கார்மேல் மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும் பூசை முடிந்ததும் வீட்டுக்கு வருமாறு அழைக்கின்றோம்.

தகவல்:
தாய்

41/5, கொண்டலடி வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(66485)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

வலக ஊழியரை அழைத்துக் கொண்டு மேற்படி பிரதேசத்தில் அளக்கப்பட வேண்டிய இடங்களை அடையாளம் காட்டினார்கள்.

அடையாளம் காட்டப்பட்ட இடங்களை அளவீடு செய்த யாழ். நிலஅளவைத் திணைக்களம் இம்மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பான வரைபடங்களை யாழ். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் எனத் தெரிகின்றது.

(உ-5)


எமது நேற்றைய
CD வெளியீடு!
சுரேஸ்கோபியின்
② பத்ரம்
வீடியோ
விமல்
யாழ்ப்பாணம்.
(சி/7827)



ST. ANTONY'S ACADEMY
தமிழ் ஆங்கிலம்
தட்டச்சு, சுருக்கெழுத்து
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்
14 - 06 - 1999
இதில்கற்க விரும்புவோர் முன் கூட்டியே பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.
50, DAVID ROAD, JAFFNA.
(சி/ 7815)



ஈசன்
கல்வி நிலையம்
கே. கே. எஸ். வீதி.
கோண்டாவில்,
பௌதிகவியல்
A/L 2000
② ஒளியியல் ②
திரு. குமரன்
ஆரம்பம்:- 11-6-99
[வெள்ளி] 3.30 P.M
(66484)


## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்)

பொலீஸ் நிலையத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படவிருக்கின்றன.

விமானத்தில் பயணம் செய்தவர்களின் சில அடையாள அட்டைகள், வங்கி ஆவணங்கள், கடிதங்கள் போன்றவை இந்த தடயப்பொருள்களில் அடங்கும். (உ-3-164)

## செம்மணியில்...

[முதலாம் பக்கத் தொடர்]

களுமான டாக்டர்கள் வில்லியம் ஹக்லேண்ட், மெலிஸா ஹோர்ண், கெவின் லீ ஆகியோரும் —

ஆசிய மன்றத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி மார்க் றீட் மக்கென்ன், சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கைக்கான ஆய்வாளர் இங்றிட் மாஸாஜ் அம்மையார் ஆகியோரும் —

பார்வையாளர்களாகக் கலந்து கொள்வர் என்று அரசு அறிவிப்புக் கூறுகிறது.

இதற்கிடையில்—

இந்த வழக்கை விசாரிப்பதற்காக விசேடமாக யாழ். மேலதிக நீதிவானாக நியமிக்கப்பட்ட என். அருள்சாகரன் விடுமுறையில் லண்டனுக்குச் சென்றிருக்கின்றார். எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்பதாக அவர் நாடு திரும்புவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று தெரிகின்றது.

எனவே தோண்டுதல் பணிக்காக — மேலும் மேலதிகமாக — புதியவர் ஒருவரை யாழ். மாஜிஸ்திரேட்டாக நியமித்து யாழ்ப்பாணத்துக்கு அரசு அனுப்பி வைக்கக்கூடும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

(உ-3)


வீக்னா
கல்வி நிறுவனம்
O/L DAY CLASS
பிரிவு 4இற்கான
அனுமதி
வரையறுக்கப்பட்டுள்ளது!
புதிய பிரிவு ஆரம்பம்:
10 — 06 — 1999
[8-30 — 2-00]
(66478)


## இந்தியா வெற்றி!

லண்டன், ஜூன் 9

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் இந்திய அணி பாகிஸ்தான் அணியை 47 ஓட்டங்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் ஆடிய பாகிஸ்தான் அணி 45.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. (உ-6)

## செயலகப்...

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ். செயலகத்தில்நேற்று நடைபெற்ற ஆளுநருடனான கலந்துரையாடலில் கலந்து கொள்ள வருகை தந்த திணைக்களத் தலைவர்களின் வாகனங்கள் எதுவும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படாமையினால் அவை செயலகத்திற்கு வெளியே வீதியோரங்களில் நிறுத்தப்பட்டிருந்தன.

(உ-5)

## பருத்தித்துறையின்...

(முதலாம் பக்கத் தொடர்)

தில் இது வரை இரண்டு மேயர்கள், பிரதேச சபையின் உப தலைவர் ஒருவர் உட்பட பல உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

எனவே புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக எனது நகர சபைத் தலைவர் பதவியையும், உறுப்பினர் பதவியையும் இராஜினாமாச் செய்கின்றேன்.

— இவ்வாறு வடிவேலு விஜயரட்ணம் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

குடாநாட்டின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விடயத்தில் அரசாங்கம் தொடர்ந்து அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்குமானால் தமதுஅமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள், உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்யும் படலம் கட்டம் கட்டமாகத் தொடரும் என்று புளொட் அமைப்பின் சார்பில் பேசவல்ல பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (உ-3-5-173)

## பொருள்களை...

(முதலாம் பக்கத் தொடர்)

வணிகர்கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

ஒருதடவை மட்டுமே இக் கப்பலில் பொருள்களைஏற்றி வருவதற்கு தற்போது தங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும்—

இந்த கப்பலில் தொடர்ந்து பொருள் ஏற்றி வருவதற்கு தங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என அரச அதிபரிடம் தாங்கள் கோரியுள்ளதாகவும்—

வணிகர் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3-5)


விற்பனையில் சலுகை
ASIA HERO, JIALING
மோட்டார் சைக்கிள்கள்
AH-70, AH-100, JL-70, CJ-50 (T.V.S)
ஆண், பெண் இருபாலாருக்கும்
பாவனைக்குகந்த மோட்டார் சைக்கிள்கள்
உடன் விற்பனைக்கு உண்டு.
குறிப்பு: ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 100 கிலோ மீற்றர் ஓடக்கூடியது.
RAVE MOTORS
245, STANLEY ROAD, JAFFNA.
தொலைபேசி இல: 2048 (66483)


# தீர்வுக்கான வழி குறித்து ஆளுநருக்கு மகஜர்

## ஈ. பி. டி. பி. வழங்கியது

" அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுப் பொதியில் அரசும், ஐ. தே. கவும் இணக்கம் கண்டுள்ள விடயங்களையும், 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் உள்ளடக்கியதான ஏற்பாடுகளே சரியான தீர்வாக அமையும்" என்று ஈ. பி. டி. பி. அமைப்பின் பிரதேச சபைத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வந்துள்ள வடக்கு - கிழக்கு ஆளுநரை நேற்றுச் சந்தித்த சமயமே மேற்கண்ட கருத்தை அவர்கள் எழுத்து மூலம் தெரிவித்துள்ளனர்.

இதுவிடயமாக ஆளுநரிடம் கையளித்தமகஜரில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு — கிழக்கு மாகாண சபை இணைப்புத் தொடர்பான 13 ஆவது சரத்துத் திருத்தம் மூலம் கிடைத்த தீர்வையும் —

அரசு முன்வைத்துள்ள தீர்வுப் பொதியில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐ. தே. கவும் இணக்கம் கண்ட அம்சங்களையும்—

இணைத்துக் கிடைக்கும் அமைப்பே சரியான தீர்வாகும்.

இந்தத் தீர்வின் மூலம் போரைநிறுத்துவதற்கு 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-3]

## இணைப்பாளராக தணிகாசலம் நியமனம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஐந்து கல்வி வலயங்களுக்கும் நிர்வாக இணைப்பாளராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு— கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இந்த நியமனத்தை வழங்கியுள்ளது.

ஐந்து வலயங்களின் பணிகளையும் ஒருங்கிணைத்து வெளி மாவட்டங்களில் உள்ள நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள வசதியாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (உ-3)

## திணைக்கள...

[முதலாம் பக்கத் தொடர்]

துரையாடப்பட்டது. ஏனைய திணைக்களங்களின் பிரச்சினைகள் மற்றும் விடயங்கள் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டால் ஆளுநர் அவற்றைக் கவனத்தில் எடுப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பகல் 12-30 மணியளவில் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் புளொட் சார்பில் செ. கிருபைராசா, அன்ரன் பொன்னையா ஆகியோரும் —

ஈ. பி. டி. பி. சார்பில் ந. திரிலோகநாதன், அன்ரன் வெலிச்சோர் ஜோன்சன், தி. நடராஜா, எ. டபிள்யூ. அரியநாயகம், ந. மதனராசா, ந. கருணாகரமூர்த்தி, பூ. குணசிங்கம், ஐ. சிறிறங்கேஸ்வரன் ஆகியோரும் —

ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் எஸ். மோகன், ம. மங்களநேசன் ஆகியோரும் —

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் சு. ஸ்ரீபாஸ்கரன், செ. கந்தையன் ஆகியோரும் — கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் சபை உறுப்பினர்களின் பாதுகாப்புப் பற்றியும் இச் சந்திப்பில்கலந்துரையாடப்பட்டது.

(உ-5-15-100-173)

## இ. தொ. க....

(முதலாம் பக்கத் தொடர்)

கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவா நாணயக்கார ஆகியோர் மேற்படி பேரணிக்கு ஆதரவு வழங்குவதாகக் கூட்டத்தில் வைத்துத் தெரிவித்தனர்.

பேரணிக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர். எல். எவ்., ரெலோ ஆகிய தமிழ்க் கட்சிகளும் —

சமசமாஜக் கட்சி, புதிய இடதுசாரிக் கட்சிகளும் —

ஆதரவு வழங்க முன் வந்துள்ளன.

இந்தப் பேரணியில் பங்கு கொள்வது தொடர்பாக ஈ. பி. டி. பி. கருத்து எதையும் இதுவரை வெளியிடவில்லை.

(உ-3)

## 4 அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

சர்களான அத்தாவுட செனவிரத்தின, சமரவீரவீரவன்னி ஆகியோரையுமே நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நான்கு மாகாண சபைகளின் முதலமைச்சர்களாக பதவியேற்கவிருக்கும் இவர்கள் நால்வரும் மாகாணத் தேர்தலில் போட்டியிடாத காரணத்தால் இவர்களுக்கு முதலமைச்சர் பதவிவகிக்கும் உரிமை இல்லை என்று தெரிவித்து மாற்றுக் கொள்கை நிலையமும் மூன்று வாக்காளர்களும் தாக்கல் செய்திருக்கும் மனு மீதே இந்த உத்தரவு விடுக்கப்பட்டது.

நீதியரசர்கள் ஹெக்டர் யாப்பா மற்றும் உபாலி இஸட் குணவர்த்தனா ஆகியோரைக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்படி உத்தரவை விடுத்தது.

(உ-6)


இடம் மாற்றம்
✠ ✠ ✠ ✠ ✠ ✠ ✠ ✠ ✠
வாடிக்கையாளர்களே!
யாழ். நகரில் இல. 121, மின்சார நிலைய வீதியில் இயங்கிய எமது
ரம்மியாஸ் சில்க்ஸ்
ஸ்தாபனம் மூடப்படுகிறது. தொடர்ந்தும்
"ரம்மியாஸ் சில்க்ஸ்" என்ற பெயரிலேயே எதிர்வரும்
14 - 6 - 99 திங்கட்கிழமை முதல்
இல. 181, யாழ். நவீன சந்தை உட்புறம்
இடம்மாற்றலாகி ஆடவர் ஆடையகமாக இயங்கும் என்பதனை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
(சி/7795)
- உ[illegible]



காவேரி சில்க்ஸ்
இன்றைய நவநாகரிகமான அனைத்து
ஆடை வகைகள், திருமணக் கூறை,
பட்டுச் சேலைகள் என்பனவற்றின்
தெரிவுகளுக்கு நாடுங்கள்!
காவேரி சில்க்ஸ்
48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T. P. No. 021 - 23 33
(சி/7796)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறை வேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-06-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org